திராவிடநாடு

23-12-56 | 25 | வார வெளியீடு | விலை 2 அணா

இசை உலக ஜோதிக்கு இறுதி வணக்கம்

'நாதசுரச்சக்கரவர்த்தி' திருவாவடுதுறை ராஜரத்தினம் அவர்களுக்கு இறுதி வணக்கம் செலுத்த பல்லாயிரவர், மயிலை இடுகாட்டில் கூடி, கண்ணீர் சிந்தினர்.

இறந்தவரின் குடும்பத்தினருக்கு நிதி திரட்டித்தர கலைஞர்கள் வாக்களித்தனர்.

நகைச்சுவை நடிகர் சாரங்கபாணி அவர்கள் ஆயிரம் ரூபாய் நிதி தருவதாகத் தெரிவித்தார்.

நமது பொதுச் செயலாளர் கழக சார்பில் ஆயிரம் ரூபாயும் மு. கருணாநிதி மூலம் இரண்டாயிரமும் அளிப்பதாக அறிவித்தார்.

நடிகமணி சஹஸ்ரநாமம், 'இசை உலக ஜோதி'க்கு சிலை அமைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தார்.

விடுதலைப் பேரியக்கம்

"தாய்த்தமிழகத்தில் பணியாற்றுகின்ற திராவிட முன்னேற்றக் கழகம் ஓர் விடுதலைப் பேரியக்கம். சமுதாய, அரசியல், பொருளாதாரத் துறைகளிலே உயர்ந்த இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்ட ஒப்பில்லாத ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்பதற்காகவே அது பாடுபட்டு வருகிறது. வடநாட்டு ஆதிபத்தியத்தை ஒழித்து திராவிட சமதர்மக் குடியரசை நிறுவவும் திட்டமிட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தக் கோரிக்கைகளுக்கு தமிழகத்தில் ஆதரவுண்டா? ஆந்திரம் ஆதரிக்கிறதா? கன்னடம் கைகொடுக்கிறதா? என்று மாற்றுக் கட்சித் தோழர்கள் நம்மைப் பார்த்துக் கேட்கின்றனர். இவர்களுக்கெல்லாம் நான் கூறுவது ஒன்றுதான். ஒடுக்கப்பட்டு உரிமை இழந்த எந்த இனமாவது தன் விடுதலைக்காகப் போர்க்கொடி ஏந்தி வீழ்ந்ததுண்டா? அழிந்ததுண்டா? எனவே திராவிட இனம் வெற்றிவாகைசூடும். சிறிது பொறுத்திருந்து பாருங்கள் என்று நண்பர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்."

இவ்வாறு இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகம், சென்ற 15-11-56-ல் கொழும்பு லேயாட்ஸ் பிராட்வேயிலுள்ள நாராயண குரு மண்டபத்தில் நாஞ்சில் நாட்டுத் தலைவர் திரு கி. மனோகரன் எம் ஏ. அவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின்போது கூறினார்.

திரு. மனோகரன் தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறியதாவது:-

இலங்கை தி. மு. கழகத்தினர் அளிக்கும் இந்த வரவேற்பிக்கு வந்தபோது மண்டபத்தினுள் நுழைந்ததும் இங்கே மேடையின் பக்கத்தில் நாராயண குருவின் படத்தைக் காண்கிறேன். 40, 50 வருடங்களுக்கு முன் திருவாங்கூர் கொச்சியில் சாதித்திமிரை எதிர்த்துப் போராடிய உத்தமரின் உருவத்தைக் காண்கிறேன். இந்தமண்டபத்தில் இலங்கை தி. மு. கவின் வரவேற்பைப் பெறுவதால் என் வாழ்க்கையிலே புதிய பொன்னேட்டைத் திருப்புகிறேன்.

இ. தி. மு. க. பொதுச் செயலாளர் திரு. இரா. அதிமணி பேசுகையில் கூறினார்; இலங்கை தி. மு. க. வின் கொள்கைவேறு, தமிழகத்திலே இயங்கும் தி. மு. க-வின் கொள்கைவேறு என்று. நான் இதனை மீண்டும் கூறுகிறேன். இங்கே பணியாற்றுகின்ற தி. மு. க-வின் கொள்கை, சட்டதிட்டங்கள் வேறு. தாய்த் தமிழகத்தில் பணியாற்றுகின்ற தி. மு. க. வின் கொள்கைகள் வேறு என்று.

தாய்த் தமிழகத்தில்பணியாற்றுகின்ற தி.மு. கழகம் ஒரு விடுதலைப் பேரியக்கம். சமுதாய, பொருளாதார, அரசியல் துறையிலே, உயர்ந்த இலட்சியத்தைஅடிப்படையாகக் கொண்டு, ஒப்பிலாப் புதிய சமுதாயத்தை உருவாக்கப்பாடுபடும் ஓர் இயக்கம்.

தி. மு. கழகத்தின் அரசியல் கொள்கையினை எடுத்துக்கொண்டால் வடநாட்டுச் சுரண்டலை ஒழித்து, திராவிட சமதர்மக் குடியரசை நிறுவ விரும்புகிறது.

இந்தக் கோரிக்கைக்கு ஆதரவு உண்டா? என்று கேட்பவர்கள் உண்டு! ஆந்திரம் ஆதரிக்கிறதா? கன்னடம் கை கொடுக்கிறதா? என்பது போன்ற கேள்விகளைக் கேட்கின்றார்கள்.

நாம் இனத்தால் ஒன்றுபட்டவர்கள். ஏதோ சூழ்நிலையால் நாம் பிரிந்துவிட்டோம். என்றாலும் மொழிவழி பிரிந்து இனவழி கூடி, திராவிடக் குடியரசை அமைக்க விரும்புகிறோம். நமது கொள்கைகளை மறைத்தும், எதிர்த்தும் கூறுபவர்கள் சில சமயங்களில் தங்கள் மனச்சாட்சியின்படி சில இடங்களில் உண்மையையும் கூறிவிடுகிறார்கள். வேறு சிலர் இப்படிச் சொன்னால் மந்திரி பதவி நிலைக்காதே என்ற காரணத்தால் மழுப்பிப் பேசுகிறார்கள். சில சமயங்களில் உண்மையைக் கக்கி விடுகிறார்கள். இவைகளை நீங்கள் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள்.

வேறு சிலர் திராவிடம் பிரிந்தால் வாழுமா? என்கிறார்கள்? நிச்சயமாக வாழ முடியும் என்று புள்ளி விபரங்களைக்காட்டியபோது ஒரு சிலர் திராவிடம் பிரிந்தால் கப்பல் படை வேண்டுமே என்று கூறுகிறார்கள். நாட்டிலே இப்படிப்பட்ட அப்பாவி மேதைகளும் உண்டு!

பொருளாதாரத் துறையில் திராவிடத்தைப் பற்றி பொருளாதார நிபுணர்கள் கூறிய திட்டத்தைக் காட்டினோம்.

உரிமை மறுக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட இனம் வீறுகொண்டு எழுவது இயற்கை. வரலாற்றைப் புரட்டிப் பாருங்கள். உரிமைக்குரலை ஒடுக்க முடிந்ததா? எந்த இனம் தன் விடுதலைக்காக போர்க்கொடி ஏந்தி வீழ்ந்தது? உரிமைக்குரலை அடக்கி, ஒடுக்க நினைத்த ஆணவக்காரர்கள் எல்லாம் அழிந்தொழிந்தார்கள். தன் இனத்தின் உரிமைக்காக, சுதந்திர சன்னிதானத்தில் ஒதுங்கியவர்கள் வெற்றிதான் பெற்றிருக்கிறார்கள்.

நாராயணகுரு அவர்கள் "தீண்டாமை"யைப் பற்றிக் குறிப்பிடுகையில், முதல் எழுத்தும் கடைசி எழுத்தும் சேர்ந்தால், 'தீமை' ஆகின்றது என்றார். இந்தவிதமான போக்கை மாற்றி அமைக்க, நிறைந்த உள்ளத்தோடு உயர்ந்த கொள்கைகளை உடைய அரசியல் இயக்கம் இ. தி. மு. கழகம்.

இலங்கைத் திராவிடர்முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியைக் காணுகின்றபோது உண்மையிலேயே பெருமையடைகிறேன். இந்த மகிழ்ச்சியான செய்தியை இன்பத் திராவிடத்தின் அண்ணல் அறிஞர் அண்ணா அவர்களிடம் கூறுவேன்.

இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற இவ்வரவேற்புக் கூட்டத்திற்கு தோழர் மு. வே. பெ. சாமி தலைமை வகித்தார். இ. தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. இரா. அதிமணி திரு. மனோகரனை வரவேற்றுப் பேசினார். கூட்டத்திற்குத் திரளான மக்கள் சமுகமளித்திருந்தனர்.

—"உரிமைக்குரல்",

நரம்புத் தளர்ச்சி

மலர் 15] ஆண்டுச் சந்தா ரூ. 7 [23–12–56] தனிப் பிரதி 2 அணு [இதழ் 25

பன்றிகளை அடைத்து வைக்கும் கொட்டில்களைப்போல இருக்கிறது! ஒரே புழுதி மயம்!! மேஜை நாற்காலிகள் மீதெல்லாம் குப்பை கூளம்!! சகிக்கமுடியவில்லை!!

சென்னையிலுள்ள துரைத்தன அலுவலகங்கள் குறித்து, இலங்கையிலிருந்து வந்தவரொருவர் பத்து நாட்களுக்கு முன்னாலே இதுபோலக் கூறுகிறார்.

கோபம் கொப்பளிக்கும் முதலில். கண்டிக்கக் கிளம்பியவர், மாட்டுக்கொட்டகை போலிருக்கிறது என்று கூறித் தொலைத்திருந்தால்கூடப் பரவாயில்லை, கேவலம், பன்றிகளை அடைத்துவை'க்கும் கொட்டில் என்றல்லவா கூறிவிட்டார், செச்சே! வெட்கமாக இருக்கிறதே என்று கூறத் தோன்றும்.

கோபம் குறைந்த பிறகு ஆர அமரச் சிந்தித்தால் சென்னைத் துரைத்தன அலுவலகங்களின் நிலைமை இவ்விதமெல்லாம், வெளிநாட்டுக்காரரைக் கேலிபேச வைக்கிறது என்ற உண்மை விளங்கும்.

'இந்து' இதழ்கூட, கேலியும் கண்டனமும் சிறிது அதிகமாக இருக்கிறது, என்றாலும், இந்தப்பேச்சு அடியோடு பொய்யுரை என்று தள்ளிவிடுவதற்கில்லை; நமது துரைத்தன அலுவலகங்கள் மோசமான நிலைமையிலேதான் உள்ளன என்று எழுதுகிறது.

அலுவலகங்களின் நிலைமை இது என்றால், அங்கு பணிபுரியும் 'சாமான்யர்களின்' நிலை எப்படி இருக்கிறது என்று பார்ப்போர், பரிதாபப்படாமலிருக்க முடியாது.

'இந்தியா ஒரே நாடு' என்று நமது வாயை அடைக்க தேசீயம் பேசுகிறார்கள்—ஆனால் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும், சென்னை துரைத்தனத்தில் அலுவல் பார்ப்பவர்களுக்கும் இடையே சம்பளத்திலும், பஞ்சப்படி விகிதத்லும் எத்துணை வித்தியாசம் காட்டப்படுகிறது என்பதைக் கவனித்தால், சென்னைக்குத் தாழ்நிலைதான் தரப்பட்டிருக்கிறது என்பதை அறியலாம்.

அவர்களும், பாபம், அஞ்சலி செய்கிறார்கள், மனுச் செய்கிறார்கள், மாநாடு கூட்டுகிறார்கள், 'மகாகனம்களை' பேட்டி கண்டு அவர்தம் மனம் உருகப் பேசிப்பார்க்கிறார்கள், பலன், திருப்தி அளிக்கத்தக்க வகையில் ஏற்படுவதாகக் காணோம்.

'சம்பளம் வாங்கமாட்டோம்' என்று கூறுகிறார்கள்—உடனே மந்திரிமார் உருட்டுவிழி காட்டுகிறார்கள் — இவர்கள் பாபம், குடும்ப பாரத்தை எண்ணி, குப்புறப் படுத்துக் கொள்கிறார்கள்!

'வேலைநிறுத்தம் செய்வோம்' என்று கூறினாலோ, சீட்டுக்கிழித்துவிடுவோம் என்று மந்திரிமார் சீறுகிறார்கள்.

இந்த நிலையில், அலுவலகங்களின் இலட்சணம், வெளி நாட்டார் பார்த்து, கேலி செய்யும் விதத்தில் இருக்கிறது.

ஊழலில் கரைகிற பணத்தையும் ஊதாரிச் செலவுக்குப் பாழாகும் பணத்தையும் மிச்சம் பிடித்தாலே போதும், சர்க்கார் ஊழியர்களின் குறைகளைத் தீர்க்கலாம். மனம் இருந்தால்தானே!

சர்க்காருக்குச் சங்கடம் விளைவிப்பது கூடாது என்ற போதனை, அரசியல் சன்மார்க்கந்தான். இல்லை என்பார் இல்லை. ஆனால் மன அமைதி குலைந்து, கசப்பு முற்றிப் போகுமானால், சர்க்கார் சிப்பந்திகளிடமிருந்து, அக்கரையான, திறமையான பணியை எதிர்பார்க்க முடியுமா? நியாயந்தான் ஆகுமா? நாடாளும் கட்சியோ, இதுபற்றிக் கவலைகொள்ளவில்லை! காரணம் என்ன? கொதித்தெழும் உழவர்களை, உழைப்பாளிகளை, சீறிடும் கிளர்ச்சிக்காரர்களை, அடக்கிவிட முடிகிறபோது, அடக்குமுறைக் கருவிகள் அவ்வளவு ஆற்றலுடன் இருக்கிறபோது, 'பேனா தூக்கிகள்' மிரட்டினாலா, அச்சப்படவேண்டும், என்று எண்ணுகிறார்கள்!

எந்தச் சர்க்காரும், சமூகத்தில், எந்த முனையிலாவது அடக்குமுறையை வீசும்போது, முதலில் அச்சத்துடனும் ஆயாசத்துடனும், விளைவு என்ன ஆகுமோ என்ற கவலையுடனும் இருக்கும். ஆனால், மக்களின் உணர்ச்சி மங்கிப் போயிருக்கும் காரணத்தினாலோ, மாற்றுக் கட்சிகளின் பேச்சு காற்றோடு போய்விடும் என்று எண்ணத்தக்க நிலை இருக்கும் காரணத்தினாலோ, சர்க்கார் அவிழ்த்துவிடும் அடக்குமுறையைக் கண்டிக்க, நாடு எழாமலிருந்துவிட்டால், பிறகு, துரைத்தனம், அடக்குமுறை வீசும் துறையிலே துரிதமாக முன்னேறிவிடும்-சமூகத்தின் ஒவ்வொரு முனையிலும் சீறிச் சீறித் தாக்க முற்படும்.

காங்கிரசாட்சி இதிலே பிற எந்தக் கட்சியும் பெற்றிராத முன்னேற்றத்தைப் பெற்றுவிட்டது. எனவே, சர்க்கார் ஊழியர்கள் பொழியும் கண்ணீரை, 'மாய்மாலம்' என்று கூறிடவும், உறுதியை சலசலப்பு என்று கேலி செய்யவும், கிளர்ச்சி என்ற பேச்சை, மிரட்டல் என்று அலட்சியப்படுத்தவும் முடிகிறது.

பொதுத் தேர்தல் நெருங்குவதால், புன்னகை காட்டி, இன்மொழி பேசி, பலதிறப்பட்டவர்களையும் சொக்கிடச் செய்யவேண்டிய நிலைமைகூட, காங்கிரசுக்கு ஏற்பட்டிருக்கிறது; எனினும், சர்க்கார் ஊழியர்கள் சம்பந்தப்பட்ட மட்டில், காங்கிரஸ் மந்திரிகள், கவலையற்றுத்தான் இருக்கிறார்கள்,

கடைசி நிமிஷமாகப்பார்த்து, 'ஏதோ சிலது' வீசினால் போதும், எஜமான விசுவாசத்தோடு ஊழியர்கள நடந்துகொள்வார்கள் என்றே, கருதுகிறார்கள்; சில காங்கிரஸ் தலைவர்கள் இதே கருத்துப்படப் பேசவே செய்கிறார்கள்.

இன்று துரைத்தனம் நடத்தும் காங்கிரஸ் கட்சியாகட்டும், மற்றோர் நாள் அந்த நிலைக்கு வரக்கூடிய வேறு கட்சிகள் தானாகட்டும், சர்க்கார் ஊழியர்களிடம் அன்புடனும் கண்ணியத்துடனும், நடந்துகொளள வேண்டுமானால், சர்க்கார் ஊழியர்கள், நமக்கு அரசியல்பற்றிய கவலை எதற்கு என்றோ, எந்தக்கட்சி ஆண்டு வந்தால் நமக்கென்ன, எந்த இலட்சியம் மாண்டுபோனால் நமக்கென்ன என்றோ இருந்துவிடாமல், சமூகத்திலே, அறிவுத் தெளிவும், பொறுப்புணர்ச்சியும் மிகுதியும் பெற்றுள்ள பகுதியினர் தாங்கள் என்பதை உணர்ந்து, ஜனநாயகத்தை உயிர்ப்பிக்கவும் நல்லாட்சிக்கு வழிகோலவுமான வாய்ப்பாக உள்ள, பொதுத் தேர்தலில் மேடை ஏறிப் பேசுவது, ஏடுகளில் தீட்டுவது ஆகியவை தடுக்கப்பட்டவை என்றாலும், தத்தமது உரிமையை இழந்துவிடாமல், ஊராள்வோர் எத்தகையினராக இருத்தல்வேண்டும் என்ற நோக்குடன் தமது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றவேண்டும்.

அரசியல்பற்றி நமக்கென்ன கவலை —என்று இருந்துவிடலாம்—ஆனால், அரசியல் முறை எங்ஙனம் அமைகிறதோ, அதற்கேற்றபடியேதான் வாழ்க்கை இருக்க முடியும்.

சர்க்காரை நடத்திவரும் கட்சி, தெளிவான திட்டமோ, உறுதியான கொள்கையோ கொண்டதாக அமையாவிட்டால், அதனால் விளையக்கூடிய அவதியும் அல்லலும், அனைவரையும்தான் தாக்குமே.

எனவே, சர்க்கார் ஊழியர்களுக்கு மட்டும், இந்த பொதுத் தேர்தல் எப்படி ஆனாலும் பரவாயில்லை என்று கூறிவிடுவதற்கில்லை.

நாட்டு மக்களிலே ஒரு பகுதியினர் என்பதுடன், அவர்கள் நாடாள்வோரின் நரம்புகளாக உள்ளனர்.

நரம்புத் தளர்ச்சி, ஆபத்தான நோயல்ல, ஆனால், ஆசாபாசம் புகுந்து குடையும், இயலாமை இன்னலை உண்டாக்கும், எவரும் பரிதாபமும் கேலியும் கலந்த குரலில் பேசுவர். அது ஆகாது!!

★

விடுதலையில் தமிழர் பங்கு

—க. நாராயணன்—

இந்திய விடுதலை இயக்கமான காங்கிரஸ் ஆரம்பிக்கப் பட்டதிலிருந்து, தமிழ் நாட்டு மக்கள் இந்த விடுதலை இயக்கத்தில் ஆர்வமுடன் விரும்பி பங்கு கொண்டார்கள். இந்த இயக்கத்தை வளர்த்தார்கள். வட இந்தியாவில் திலகர் விடுதலைநாதம் எழுப்பிய காலத்தில் தமிழகத்தில் வ. உ. சிதம்பரனார் போர் முழக்கம் எழுப்பினார். தமிழ் நாட்டிற்கே விடுதலை இயக்கம் வேகமாகப் பரவியது. சிதமபரனார் மூட்டிய சுதந்தரத் தீ நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பரவிற்று. தமிழகம் விடுதலைப்போரின் முன்னணியில் நின்றது பல தியாகங்களை விருப்பமுடன் செய்தது. வீரர் சிதம்பரனார் வெள்ளையருக்கெதிராக சுதேசிக் கப்பல் ஓட்டினார். தனது திரண்ட சொத்துக்களையும் சுகவாழ்வையும் நாட்டிற்காக தியாகம் செய்தார். சிறைப்பட்டார்! செக்கிழுத்தார்! கல்லுடைத்தார்! இரட்டை ஆயுள் தண்டனை பெற்றார்! அக்காலத்தில் நம் சிதம்பரனாரைத் தென்னாட்டுத் திலகர் என்றே மக்கள் அழைப்பர். ஆனால் இன்று விடுதலை ஆட்சியாளர்களால் இவர் மறக்கப்பட்டு அல்ல மறைக்கப் பட்டுவிட்டார். காரணம் இவர் தமிழராகப் பிறந்ததைத்தவிர வேறென்ன இருக்க முடியும். திலகரின் நினைவு தினம் இந்திய அரசாங்கத்தால் கொண்டாடப் பெறுகிறது. இந்திய வானொலி நிலயங்களில் அவர் புகழ் முழக்கப்படுகிறது. அரசாங்க அலுவலகங்களுக்கு விடுமுறை அளிக்கப் படுகின்றன. அவரது நினைவாக அவரது உருவப்படம் தாங்கிய தபால் தலையும் அஞ்சலுறையும் வழங்கப் படுகின்றன, பல நகரங்களிலே அவரது உருவச் சிலைகள் திறந்து வைக்கப்படுகின்றன மந்திரிமார்களால். இந்திய அரசாங்க செய்திப்பட இலாகா இதுபற்றி விரிவான விளக்கங்களுடன் படமெடுத்து இந்தியாவில் மட்டுமின்றி அயல் நாடுகளுக்கும் விளம்பரப்படுத்துகின்றன. ஆனால் திலகரைக் காட்டிலும் தீவிர வாதியாக இருந்து சிறைபட்டு சொல்லொணாச் சித்திரவதைப்பட்டு தமிழகத்தைத் தட்டி எழுப்பிய தென்னாட்டுத் திலகருக்கு இந்திய அரசாங்கம் நினைவு நாள் கொண்டாடியிருக்கிறதா? நினைவுச் சின்னங்கள் எழுப்பியதுண்டா? தபால் தலையில் இவர் உருவம் பொறிக்கப்பட வேண்டுமென்ற எண்ணமாவது அரும்பியதுண்டா? அது கிடக்கட்டும் தன்னுடைய சொத்துக்களையும் சுக வாழ்வையும் நாட்டுக்குத் துறந்து செக்கிழுத்த அந்தத் தியாகியின் துணைவியாரும் மக்களும்வறுமையால் வாடிய நாளிலும்கூட இந்திய அரசாங்கம் உதவவில்லை. தமிழ் நாட்டிலுள்ள சில தயாளவான்களால் சிறிதளவு நிதி சேர்க்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குமுன் அவரது துணைவியாருக்குக் கொடுக்கப்பட்டது. இதை ஏன் சொல்கிறேனென்றால் தமிழர்கள் இந்திய உபகண்ட விடுதலைப் போரில் முன்னணியில் இருந்து அரியபல தியாகங்கள் செய்திருக்கிறார்கள், ஆனால் இந்திய விடுதலைக்கு உழைத்தவர்கள் என்று புகழ்படப் பெறுபவர்கள் பெரும்பாலும் ஏன் எல்லோருமே வடநாட்டினராகத் தான் இருக்கிறார்கள். தமிழனுக்கு உரிய புகழ் வழங்கப்படுவதில்லை. இதைப்பற்றி தமிழ்நாட்டு தேசீய வாதியைக் கேட்டால் வட இந்தியத் தலைவர்கள் இந்தியா பூராவும் புகழ் பெற்றவர்கள் பெரிய தலைவர்கள் ஆனால் நம் தமிழ் நாட்டுத் தலைவர்கள் சிறியவர்கள், தமிழ் நாட்டில் மட்டும் தான் இவர்களுக்குச் செல்வாக்கு. வடநாட்டினர்க்கு இவர்களைப்பற்றி தெரிந்திராதபோது எப்படிக் கொண்டாடுவார்கள் என்று பதில் சொல்லுவார்; பாபம்! அவர் என்ன செய்வார்? அங்கிருப்பவர் அவர் கண்ணுக்குச் சிறியவராகவும் தூரத்திலிருந்து வரும் ஒரு வட நாட்டினர் மிகப்பெரிய தலைவராகவும் கருதுவது பொதுவாக நம் தமிழ்நாட்டு மக்களில் பெரும்பாலோரது எண்ணமாக இருக்கும்போது இவர் எப்படி மாறுபாட்டிருக்க முடியும்? அடுத்தபடியாக மஹாத்மா காந்தியடிகள் நடத்திய ஒத்துழையாமைப் போராட்டத்திலும் தீவிர பங்கெடுத்துக்கொண்டவர்கள் தமிழர்தான். காந்தியாரின் முதல் போராட்டத்தில் ஆப்பிரிக்காவில் உயிர்நீத்த வள்ளியம்மை நம் தமிழ் நாட்டுப் பெண்மணிதான். தமிழ் நாட்டிலும் ஆயிரக்கணக்கான மக்கள் விடுதலைப் போரில் தங்கள் உடமைகளையும் உயிர்களையும் தத்தம் செய்தனர். ஆனால் வள்ளியம்மையைப் பற்றியோ மற்ற தமிழ்நாட்டுத் தியாகிகள் திருப்பூர் குமரன் போன்றோரைப் பற்றியோ இன்றைய ஆட்சியாளர்களுக்குத் தெரியுமா என்பதே சந்தேகம்? இவர்களைப் பற்றி அவர்கள் நினைப்பதுகூட இல்லை.

★

காஞ்சீபுரம்

23—12—'56

தம்பி !

பம்பாய்க்காரர் பட்டீல் காங்கிரசை கேரளத்தில் வெற்றிபெறச் செய்வதற்காக வென்றே, தனியானதோர் திட்டத்துடன், அனுப்பப்படுகிறாராம். புறப்படுவதற்கு முன்பு பட்டீல், தமது திட்டத்தில் ஒரு துளி எடுத்துக்காட்டினார்—ஓட்டு வேட்டைக்கு இந்தத்தடவை சினிமாப்படம் பயன்படுத்தப்படுமாம்!

மிகப் பெரும்பாலான மக்கள் தற்குறிகளாக உள்ள இந்த நாட்டிலே, சினிமா மூலம் நல்லவிதமான பிரசாரம் நடத்தலாம் — படக்காட்சியைக் காணும்போது கண்ணுக்கும் கருத்துக்கும் குளிர்ச்சி ஏற்படும்—மக்கள் மகிழ்ந்திருக்கும் நேரமாகப் பார்த்து, காங்கிரசுக்கு 'ஓட்டு' தாருங்கள் என்று கேட்டுப் பெறுவது எளிது என்பது பட்டீல் வாதம்.

இந்தத் திட்டத்தை, நெடுந் தொலைவிலிருந்து, பட்டீல் வந்து தானா செய்துகாட்டவேண்டும்—பணம்பள்ளியிடம ஒரு படம் கொடுத்தால் போதாதா என்று கேட்கிறாய், தெரிகிறது; ஆனால், தம்பி! ஒரு விஷயம் உனக்குப் புரியவில்லையே, கேரளத்துக்குப் பட்டீல் தேவை என்பதற்காக அவர் அனுப்பப்படுகிறார் என்று கூறப்படுகிறதே தவிர, உண்மை வேறு என்றுதான் நான் எண்ணவேண்டி இருக்கிறது.

பட்டீல், கேரளம் அனுப்பப்படுவதற்குக் காரணம், இங்கு அவர் மிகமிக அவசியமாகத் தேவை என்பதாலே அல்ல; பட்டீல் இந்தத் தேர்தலின்போது, பம்பாயில் இருக்கமுடியாது, என்பதாலே அவர் கேரளம் அனுப்பப்படுகிறார் என்று எண்ணவேண்டி இருக்கிறது.

'தேர்தல் வேலை'யிலே இவர் புலி! கல்லிலே நார் உரிப்பார்! காயைக் கனிய வைப்பார்! புதுப்புதுப் பிரசார முறைகளைக் கண்டறிவார்! யாராரை எப்படி எப்படி வளையவைப்பது, எங்கெங்கு எப்படியெப்படி நெளிந்து கொடுப்பது, என்ற வித்தைகளிலே மெத்தச் சமர்த்தர் என்றெல்லாம் கூறப்படுகிறது. இது உண்மை என்று வைத்துக்கொண்டால், தம்பி, இந்த வித்தையை அவர் தமது மாகாணத்தில் செய்து காட்டலாமே! ஏன், இங்கு வருகிறார்? தேர்தல் காலத்தில், பட்டீல் பம்பாய் பகுதியிலே இருப்பது, அவருக்கோ, காங்கிரசுக்கோ நல்லதல்ல! எனவேதான், பட்டீலைப் பிடித்து கேரளத்துக்கு அனுப்புகிறார்கள்.

நான் வேண்டுமென்றே கூறுகிறேன் என்று காங்கிரஸ்காரர் யாராவது பேசுவரேல், தம்பி, ஒரு கிழமையாக, பட்டீல் வாழ்கிற பகுதியில், காங்கிரஸ் படுகிறபாடு பற்றிப் பத்திரிகைகளிலே வருகிற செயல்களைப் படித்துக்காட்டு.

படம் தயாரித்துக்கொண்டு பட்டீல், இங்கு வருவது இருக்கட்டும், இப்போது, அவர் மாகாணத்தில் காங்கிரஸ் பெரிய புள்ளிகள் படுகிறபாடு, படமாக்கப்பட்டால்,

காட்டாட்சி...

பாரெல்லாம் பரிகாசம் செய்யும் போலல்லவா இருக்கிறது!!

பம்பாய் — ஆமதாபாத் அமளி அடங்கிவிட்டது என்றும், மக்கள் அறிவு பெற்றுவிட்டனர், காங்கிரஸ் ஆணைக்குக் கட்டுப்பட்டு விட்டனர் என்றும், இருமொழி ராஜ்யத்தை ஏற்றுக்கொண்டு விட்டனர் என்றும், மொரார்ஜீ தேசாயைத் திண றவைத்தவர்கள், நேரு பண்டிதரைப் பேசவிடாத படி செய்தவர்கள், இப்போது வெட்கித் தலைகுனிந்து கிடக்கிறார்கள் என்றும், தேசிய ஏடுகள் மிகத் தந்திரமாகப் பிரசாரம் செய்தன.

சாவன் பம்பாய் மாகாண முதலமைச்சரானார், புதிய சூழ்நிலையே பூத்துவிட்டது, என்று பூரிப்புடன் அந்த ஏடுகள் எழுதின.

ஆனால், நீறுபூத்த நெருப்பென, சம்யுக்த மராட்டிய இயக்கமும் மகாகுஜராத்தி இயக்கமும்இருந்து வருகின்றன!

அடுத்து வருகிற பொதுத்தேர்தலில், காங்கிரசை முறியடிப்பதற்கான ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

அந்த இயக்கங்கள் ஓய்ந்து போயின; மாய்ந்துவிட்டன; என்று டில்லி மனப்பால் குடித்தது. இல்லை! இல்லை! எங்கள் இதயக் குமுறல் அடங்காது! எமது இலட்சியம் அழிந்துபடாது! நாங்கள் எதற்கும் தயார்! என்று கூறுவது போல, கிளர்ச்சிக்காரர்கள், ஒரு கிழமையாகக் கொதித்து எழுந்து விட்டுள்ளனர்.

பழையபடி, மந்திரிகள் மருள்கிறார்கள்! மோடார்கள் உடைபடுகின்றன! கதர்க் கொடிகள் தீக்கிரையாகின்றன! குல்லாய் களைக் கொளுத்துகிறார்கள்! குலை அறு படும் நிலையில், தலைதப்பினால் தம்பிரான் புண்ணியம் என்று தலைவர்கள் ஓடி ஒளிகிறார்கள்! கருப்புக் கொடி காட்டுவதும், கண்டன முழக்கம் எழுப்புவதும், பொதுக் கூட்டங்களை நடைபெறவொட்டாது தடுப்பதுமான காரியம், தீவிரமாகச் செய்யப்படுகின்றன!

இந்த நிலைமை நீடிக்குமானால், தேர்தலின்போது, ஓட்டுச்சாவடிக்குப் பட்டாளக் காவல் போட்டாக வேண்டும்போலிருக்கிறது!

காங்கிரஸ் அபேட்சகர்கள் தேர்தலில் வெற்றிபெறுவார்களா என்பது கிடக்கட்டும்; மக்களிடம் இவர்கள் சென்று, ஓட்டு கேட்டு விட்டு மானம் அழியாமல், மரியாதை கெடாமல், ஊனம் ஏற்படாமல், வீடு திரும்புவார்களா என்பதே அல்லவா, பாவம், சந்தேகமாகிவிட்டது!

பட்டீல், மெத்த சமர்த்தர்தான்! இந்தச் சூழ்நிலையில், அவர் கேரளம் நாடுகிறார்!

தமிழ்நாடு தவிர, பிற எல்லா இடங்களிலும், மக்கள் தத்தமது மொழி, பண்பாடு, இவற்றின் அடிப்படையில் அமையும் உரிமை ஆகியவற்றுக்காகச் சிறிது வரம்பு மீறிக் கூடக் காரியத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இங்குதான், கோயிலில் கற்பூரம் கொளுத்துவது மூடப்பழக்கம், அது ஒழியவேண்டும்; அதை ஒழிப்பதுதான் எமக்குள்ள வேலை; என்றாலும், கற்பூரக்கடை வைத்திருக்கும் காத்தமுத்து, நல்ல மனிதர், நாலைந்து குழந்தைகளுக்குத் தகப்பன், எனவே அவனுக்குப் பிழைப்புத் தரவேண்டும் என்பதற்காக, அவன் கடையிலே கற்பூரம் வாங்கிக் கோயிலில் கொளுத்துங்கள்; என்று கூற முடிகிறது! மனம் இடம் தருகிறது!!

அங்கெல்லாம், அவ்விதமில்லை; எமது பிறப்புரிமையைப் பறித்திட உனக்குத் துணிவு பிறந்துவிட்டபோது, எனக்கும் உனக்கும் என்ன பந்தம் பாசம், ஒட்டு உறவு, சொந்தம், போ! போ! — என்று உரிமைக்காகக் கிளர்ச்சி நடத்துவோர், முழக்கமிடுகிறார்கள்!

அவர்கள் கையாண்டுவரும் முறைகள், தம்பி, எனக்குப் பிடிக்கவில்லை, ஆனால் அவர்கள் உரிமைக்காக எழுச்சி பெற்று பணியாற்றும் போக்கினைப் பாராட்டாமலிருக்க முடிகிறதா!

அமைச்சர்கள் படுகிற அவதியைக் காணும்போது, பட்டீல் எப்படி அங்கு தேர்தலின்போது இருந்திட ஒப்புவார்! எனவேதான் கேரளம் வருகிறார்.

பலமான கல்வீச்சு
போலீஸ் சவுக்கிமீது தாக்குதல்
முனிசிபல் லாரிகள் தகனம்
போலீசாருக்குக் காயம்
விளக்குகள் உடைக்கப்பட்டன
பொதுக் கூட்டம் கலைக்கப்பட்டது!
கைகலப்பிலே பலருக்குக் காயம்
கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு!

தம்பி, ஆமதாபாத் நகரில், டிசம்பர் 15-மாலை நடைபெற்ற நிகழ்ச்சிகளை, தலைப்புகளாகத் தந்திருக்கிறேன்; இவற்றைக் கொண்டு, நீ, மனக்கண்ணால் பார், நிகழ்ச்சியை.

கூட்டம் போடவந்துவிட்டார்களா, கூட்டம்?

அவ்வளவுக்குத் துணிந்து விட்டார்களா, அக்ரமம், ஜீரணமாகிவிடும் என்ற எண்ணமோ!

என்று, சிறுசிறு பிரிவினர், உரையாடுவது, தெரிகிறதா!

கூட்டத்தில் பேசும் பிரமுகர், எந்த போலோ பாரத் மாதாகி என்ற முழக்கமும், மகாத்மா காந்திக்கு ஜே என்ற முழக்கமும், கோடிக் கணக்கான மக்களைச் சொக்கிட வைத்ததோ அதே முழக்கத்தின் துணையைத்தான் தேடுகிறார்; ஆனால் பாபம், பலிக்கவில்லை! அந்த முழக்கத்தை மிஞ்சும் வேறோர் முழக்கம் எழுகிறது,

மகாகுஜராத் ஜிந்தாபாத்!
சாவன் சர்க்கார் முர்தாபாத்!

(16-ம் பக்கம் பார்க்க)

மலாயாவில் ஒருமாதகாலம் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டுத் திரும்பிய சுவாமி சித்லவானந்தர் கூறுகிறார்:-

"மலாயாவில் குடியேறியுள்ள ஏராளமான சீனர்கள் அந்நாட்டு வாழ்க்கையில் இரண்டறக் கலந்து பிரஜா உரிமைபெறத் தமது தகுதியை ஸ்தாபித்துக்கொண்டுள்ளனர். ஆனால் தமிழர்களின் நிலை வேறுவிதமாய் இருக்கிறது. அவர்கள் அந்நாட்டில் நிரந்தர உரித்துக்களை ஏற்படுத்திக்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை அவர்களின் நலனுக்காக செயலாற்றுவதற்கு சக்திவாய்ந்த ஸ்தாபனம் எதுவும் இருப்பதாகவும் தெரியவில்லை. பொதுவாகப் பார்க்குமிடத்து மலாயாவில் தமிழர்களின் எதிர்காலம் திருப்திகரமாயிருக்குமெனக் கூறுவதற்கில்லை.

தோட்டத் தொழிலாளர்கள் (தமிழர்) சம்பந்தப்பட்டவரை கூட்டுறவு முறையில் தோட்டங்களை வாங்கி நிரந்தர உரித்துக்களை ஏற்படுத்திக் கொள்வதுதான் சிறநத தென்பதை அங்கு பலரும் உணரத் தலைப்பட்டுள்ளனர்."

—வீரகேசரி.

சரியா! நீதியா!!

ஐந்தாண்டுத் திட்டத்தின் பெருமை குறித்து அகிலமெல்லாம் பரப்புகிறார்கள், டில்லி அரசினர்.

"ஐயோ! எங்கள் கதி என்ன?" என்று அவலக் குரல் கிளம்புகிறது, கேரளத்திலிருந்து.

பாலைவனங்களைப் பசுஞ் சோலைகளாக்குவதாகப் பறை சாற்றுகின்றார், நேரு பண்டிதர்! பசுஞ் சோலை பாலைவனமாக்கப்படுகிறதே பாரீர் இதனை—என்று ஓலமிடுகிறார்கள் கொல்லம் மாவட்ட இரப்பர் பயிரிடுவோர்.

இந்திய உபகண்டத்தில் இயற்கையாகவே இரப்பர் விளைகிற இடம் கேரளமாகும். இந்தியாவில் விளையும் இரப்பரில் 91-சதவிகிதம் கேரளத்திலேயே உற்பத்தி செய்யப்படுகிறது.

91-சதவிகிதம்! வேறெங்கும் இல்லாத செல்வம் கேரளத்திலிருக்கிறது. சரியானபடி கவனித்தால், இந்திய உபகண்டத்தின் தேவைகளைக் கேரளமே கவனித்துக்கொள்ளும். அத்தகைய அரியதொரு செல்வம் இருக்கிறது, இங்கே.

"எமக்கு ஆதரவு தாரீர் எமது உற்பத்தியை விலைபோகச் செய்வீர். நியாயமான வருமானத்தைப் பெற்றுத் தாரீர்!" என்று இரப்பர் பயிரிடுவோர், பல்லாண்டு காலமாகக் கூக்குரலெழுப்பி வருகிறார்கள். இவர் தம் கோரிக்கைகளைக் கவனித்து, இரப்பர் தோட்டங்கள் வளம்பெறுவதற்கான வசதிகளையும் தேடித் தந்தால், வெளிநாட்டுக்கே நாம இரப்பர் அனுப்பி, பணம் குவிக்க முடியும்! அத்தகைய மணவளம் இருக்கிறது கேரளத்தில்!

மனவளம், டில்லியிடம் இல்லையே—அதனால், இரப்பர் பயிரிடுவோர் சொல்லொணா இடையூறுகளையும் வேதனைகளையும் அனுபவித்தவாறு எப்படியோ, தமது பழந் தொழிலை நடத்திக்கொண்டுள்ளார்கள்.

இதற்கு, இதோ, கேடு வருகிறது, டில்லி அரசால், இத தொழிலுக்கும் தீங்கு விளைய இருக்கிறது!

இரப்பர் விளைவது தெற்கே, ஆனால் புதிதாக ஒரு ஆலை அமையப்போகிறது வடக்கே—நேருவின் ஐக்கிய மாகாணத்தில்.

செயற்கை இரப்பர் தயாரிக்கும் ஆலையாம். இயற்கை, 'இதோ! இதோ!" என்று அள்ளி வழங்க கை நீட்டி நிற்கிறது, இங்கே. அதனை நம்பி ஏராளமானோர் காத்தும் கிடக்கிறார்கள். இயற்கையின் பிரசாதத்தைப் பெறும் வசதிகளும், பயன்படுத்தும் திட்டங்களும் தீட்டப்படவில்லை! பட்டை நாமம் குழைத்துப் போடுகிறது டில்லி. வடக்கே புதிய செயற்கை இரப்பர் ஆலை கட்டப் போகிறது.

செயற்கை இரப்பர் உற்பத்தியானால், வாழ்வதா சாவதா என்று தத்தளிக்கும் தமது தொழிலுக்கு மிக்க நெருக்கடி ஏற்பட்டுவிடும் என்று அஞ்சுகின்றனர், கேரள உற்பத்தியாளர்கள். அதனாலேயே, இது தகுமா, நீதியா, தருமந்தானா என்று கொல்லத்திலே கூடி வருந்தியிருக்கிறார்கள்.

கைத்தறித் தொழிலை நசுக்க வடக்கு கோர உருவெடுத்தது. அதனின்றும் மீள முடியாமல் தவித்துக் கிடக்கிறோம், இன்னும்.

நாட்டின் கைத்தொழிலை வளர்ப்பதாகக் கூறும் காங்கிரஸ் அரசோ, பழந்தொழில் பாழ்பட செயற்கை இரப்பர்சாலை அமைக்க இருக்கிறது.

செயற்கை இரப்பருக்காகச் செலவிடப்படப்போகும் தொகையைப்பற்றி எண்ணும்போது மிகப் பெரிதாகத் தெரிகிறது — என்கிறார், 'மெயில்' இதழார். அதற்காகப் பலகோடி ரூபாய்கள் செலவாகப்போகின்றன. எப்படி செயற்கை இரப்பர் செய்வது என்பதைச் சொல்லித்தர பல வெளிநாட்டு நிபுணர்களை அழைக்கப்போகிறது டில்லி.

இந்தப் பணத்தை இரப்பர் தோட்டங்களுக்கு அளித்தால், பல இரப்பர் செடிகளைப் பயிரிடவும், தொழிலுக்கு ஒரு நம்பிக்கையிருக்கிறது எனும் தைரியத்தில் ஆனந்தத்தோடு இரப்பர் தொழிலைப் பேணவும் செய்யலாம் நம்மவர்கள்.

நாமம் குழைத்துப் போடப்படுகிறது தெற்கே. செயற்கைத் தொழிற்சாலை அமையப்போகிறது வடக்கே.

இதனைக்கண்டு, இனி என்செய்வோம் என்று அவலக்குரலெழுப்புகிறார்கள் கொல்லத்திலிருந்து.

கொல்லத்தில் இது நிலைமை! திருவனந்தபுரத்திலோ கவர்னரைச் சந்தித்துக் கண்ணீரையும் கஷ்டங்களையும் சமர்ப்பித்திருக்கிறார்கள், 45000 முந்திரித்தொழிலாளர்கள். முந்திரி உற்பத்தியில் முதலிடம் வகிப்பது கேரளமாகும். கேரளத்து முந்திரி உலகத்திலேயே பிரசித்திபெற்றது. ஆனால், இன்று அழியும் கட்டத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. 45000 தொழிலாளர்கள் அவதிப்பட நேர்ந்துள்ளது.

தொழிலாளர்கள் தமக்குச் சரியாக வேலைகொடுக்கவில்லை என்று கூறுகிறார்கள் — வேலை கொடுக்க வேண்டியவர்களைக் கேட்டால், எமது முந்திரி வியாபாரமாகவில்லையே என்கிறார்கள் — சரக்குக்கு உலக முழுதும் மதிப்பு இருக்கிறது. ஆனால் தொழிலோ இப்படிச் சீரழிந்து வருகிறது.

இந்த இலட்சணத்தில் வடக்காவது, தெற்காவது என்கிறார்கள் காமராஜர்கள்.

இயற்கை வளம் தேய, செயற்கைக்காகச் செலவழிக்கும் சித்தம் ஏன் ஏற்பட்டது டில்லிக்கு. அந்த ஆலையையும் கூட, இரப்பரையறிந்த தெற்கே அமைக்காமல் வடக்கே ஏன் கட்டுகிறது!

ஆத்திரமடையக்கூடாது—யோசிக்கவேண்டும், தேசிய நண்பர்கள், வாழ்வது வடக்கா, தெற்கா என்று முடிவு செய்யவேண்டும்.

★

HOME LAND

'Home Land' ஏஜன்சி சம்பந்தமாக தோழர்கள் கடிதம் எழுதியபடி இருக்கிறார்கள். ஏஜன்சிவிபரங்கள் ஜனவரி 15-க்கு மேல் அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொறுப்பாளர்.

தணலில் தங்கம்

14

"அக்கா..." என்று நான் சொன்னதும் அவர் முகம் அடைந்த மாறுதல் உள்ளத்து வேதனையைத் தெளிவாக உணர்த்திற்று.

என்னவோ கேட்க வேண்டும் என்ற வேட்கையால் கேட்டேனே ஒழிய அதைக் கேட்டு அவர் முகந் திரிந்ததைக் கண்டபோது கலங்கிப் போனேன். ஓரகத்தி யாருடனோபோய் விட்டாள் என்ற செய்தி கேட்டதும், அவளைப்பற்றி எண்ணி எணணி இரங்கினேன். இன்னும் ஏதேனும் செய்தி தெரிந்துகொளளலாம் என்று அறிய அவரைக் கேட்டேன்.

ஆனால் அவரோ தீயை மிதித்தவர் போல் திடுக்கிட்டார்; கேளாததுகேட்டதுபோல் துன்புற்றார். 'தங்கம்' என்று எழுத்தெழுத்தாக அழுத்திச் சொன்னார். சொற்கள் வெளிவராமல் உதடுகள் மட்டும் அசைந்தன. 'ஏன் கேட்டோம்' என்றுகூட எண்ணினேன்.

சற்று நேரம் அங்கே ஆழ்ந்த அமைதி தாங்க இயலாத தவிப்பைத் தந்து என் மனதை வேதனைக்குள்ளாக்கியது.

நீண்ட நெட்டுயிர்ப்பு விட்டவாறே பேசத் தொடங்கினார். அப்போது முகத்தில் இனம் கூற இயலாத அமைதி இருந்ததாக எண்ணினேன்.

"தங்கம் சொல்லத்தானே வேண்டும். கேள், பழைய கதை எல்லாம் என்னத்திற்கு, எப்படியோ ஆகிவிட்டது" என்று திணறினார்.

"வேண்டாம், அந்தப் பேச்சை விடுங்கள், தெரியாமல் கேட்டேன்" என்றேன் நான்.

"சொல்கின்றேன் தங்கம், சொல்லுகின்றேன். அவள் பேச்சைக் கேட்டுக்கொண்டு ஆடாத ஆட்டமெல்லாம் ஆடினேன். உன்னை எப்படி எல்லாமோ துன்புறுத்தினேன். நானும் எவ்வளவோ முயன்றுபார்த்தேன்; முடியவில்லை. என்மனதை எப்படியோ மயக்கி நஞ்சாக்கிவிட்டாள். விடுபடவே முடியவில்லை. சில சிலநேரங்களில் போராடிப் புதுவலிவு பெறுவேன். ஆனால் அவளை நேரில் கண்டதும், என் மன உறுதி, சுழன்றடிக்கும் காற்றில் திசை தெரியாமல் பறக்கும் இலவம் பஞ்சுபோல் கட்டுக்கடங்காமல் சிதறிப்போகும்; நானும் சீர்கெட்டுப் போவேன்" என்று அவர் ஏதோ தானே பேசுவதுபோல பேசிக் கொண்டிருந்தார்.

"வேண்டாம், ஏன் வீணாக அதை எல்லாம் நினைக்கிறீர்கள்" என்று இடையில் தடுத்தேன்.

"வீணாக என்ன தங்கம்? அப்போது வாழ்ந்த வாழ்க்கை வீணானது—வறுமையானது. நகை செய்யத்தேர்ந்து எடுத்தபொன்னில் மாசோ தூசோ இருந்தால் அதைத் தணலில் இட்டுப் புடம்போடுவார்கள்; தூய்மைப்படுத்துவார்கள். நானோ மாசற்ற உன்னைத் தணலில் தள்ளினேன். துயரத் தணலில் உன்னை வீழ்த்தினேன்' உன்மீது மாசும் கிடையாது; தூசும் அண்டாது; ஆனால் நான் மாசற்ற தங்கத்தின் மாண்பு தெரிந்துகொள்ளாமல் அதைத் தணலில் போட்டேன்; இதோ மனம் நொந்து புழுங்குகின்றேன்" என்று விம்மினார்.

என்மனம் பட்டதுன்பத்தை என்ன என்று சொல்லுவது?

அவரோ விடாமல் பேசிக் கொண்டே இருந்தார். "உன் ஓரகத்திதான் தங்கம் அந்தப் பொன்னுச்சாமியை என்மீது சண்டை

மா. கி. தசரதன்

போட ஏவிவிட்டவள். அதை நானே கேட்டேன். அதனால்தான் நானும் அவனும் சண்டைபோடும்போது அயலவர்கள்போல் அவர்கள் ஒரு மூலையில் நின்று வேடிக்கை பார்த்தனர்.

"அண்ணன்மீதும் குற்றம் சொல்வதற்கு ஒன்றுமில்லை. உறுதி அற்றவராக, கோழையாக இருந்தார் என்பதுதான். அவரும் பாவம் மன வேதனை தாங்காமல் எங்கோ போய் விட்டார் போலிருக்கிறது. உன் ஓரகத்தி பொன்னுச்சாமியுடன் போய் விட்டபிறகு அவர் முகத்தைப் பார்க்கவே அஞ்சினேன். என்னிடமும் சொல்லவில்லை; ஊரிலும் யாருக்கும் தெரியாது; எங்கே போனார் என்பதும் புலப்படவில்லை. எங்காவது மன அமைதி பெற்றால் சரிதான். நானும் துன்பம்தாங்கமுடியாமல்மனவேதனையுடன் அல்லல் பட்டேன்; ஓடிக் கொண்டிருந்த வண்டியின் முன் வீழ்ந்து இந்த அவதியும் உறுகின்றேன்" என்று கலங்கினார்.

சென்றதை எண்ணி மனம்வருந்துகின்றார் என்பது தெளிவாகத் தெரிந்தது. தன் வாழ்க்கையை எண்ணி வருந்தினார், உணர்ச்சியின்கடலானார்; மெல்ல அவரை அமைதியடையச் செய்வது பெரு முயற்சி ஆயிற்று.

எப்படியோ இல்லமே எங்கள் வாழ்க்கை என்று சொல்லக் கூடிய வகையில் அதனுடன் நெருங்கிய பிணைப்பு ஏற்பட்டுவிட்டது. ஆனாலும் நாள் தோறும் ஒரே இடத்தில் அடைந்துகிடந்தது சில சில வேளைகளில் சலிப்பை உண்டாக்கியது. கிராமத்தில் எப்படியோ அது முடிகின்றது ஆனால் சென்னையில் இயலுவதில்லை. சென்னையிலேயே இருந்து பழக்கமாகிவிட்டவர்கள் எப்போதோ ஓரிரு முறை கிராமங்களுக்குச் சென்றால் 'பொழுதே போகவில்லை' என்று மருண்டு மீண்டும் நகரத்தைநாடிஓடிவந்துவிடுகின்றனர் நானும் இல்லத்திற்கு வந்த பிறகு சென்னை வாசிகளைப்போலாகிவிட்டேன். எங்காவது போகலாம் என்ற ஆசை எழும்.

இதைக்குறிப்பால் உணர்ந்த குழலியார் ஒரு நாள் "தங்கம் அடுத்த வாரம் முதல் நீயும் எங்களுடன் மருத்துவ மனைக்கு வரலாம். நல்ல தொண்டாகும்" என்றார்கள்.

எங்கள் இல்லத்தில் — ஆம் இப்போது நான்தான் அதனுடன் இரண்டற இணைந்துவிட்டேனே, எங்கே யாரிடம்சொன்னாலும் எங்கள் இல்லம் என்றுதான் சொல்லுவது பழக்கமாகி வருகிறது — மாணவிகளை எல்லாத் துறையிலும் பழக்கி வைக்கின்றோம். மாணவிகளுக்குத் தேவையான எல்லாவிதப் பயிற்சிகளையும் இல்லத்திலேயே அமைத்துத் தருகின்றோம், சொந்த நலன்மட்டும் முக்கியமல்ல, பிறர் நலனும் பேணி வளர்க்கவேண்டும் என்று மாணவிகள் உணர்வதற்காக இல்லத்திலேயே சமூகநலக் கழகம் என்று ஒன்று அமைத்திருக்கின்றோம். அந்தக் கழகத்தின் பல பிரிவுகள் பல வகையில் சமூக நலனுக்குத் தொண்டுசெய்து வருகின்றன. பக்கத்துப் பேட்டையில் தொழிலாளர் வாழும் பகுதியில் துப்புரவு செய்தல், இரவுக் காலத்தில் பள்ளிக்கூடம்

நடத்துவது, எளிய சிறு மருத்துவ உதவிகள் செய்வது போன்றவை அதன் பணிகள். வாரத்தில் ஒரு நாள் மட்டும் எல்லோரும்கூடி ஏதாவது ஒரு மருத்துவ நிலையம் சென்று அங்கே துன்பப்படும் நோயாளிகளுடன் பழகிப் பேசிவருவோம். நாள்தோறும் வருவாரும் போவாருமாக இருக்கும் ஒருசில நோயாளிகள் போக எஞ்சியவர்கள் அனாதைகள் போல் திக்கற்றுக்கிடக்கும் நிலையில் நாள்தோறும் வந்து வந்து போகும் நர்சுகளையும் மருத்துவர்களையும் தவிர இதுபோல் புதியவர்கள் வந்துபழகும் முறையை மிகவும் விரும்புகின்றனர்.

இதுவரை நான் எப்போதோ ஒரு முறைதான் அவ்வாறு போய் வந்தேன். என் உடல் நிலை மேலும் போவதற்கு இடம் தரவில்லை. அம்மாவும் அப்பாவும் போனதே இல்லை.

இந்த முறை என் மனநிலையை மாற்றுவதற்காகக்கருங்குழலி அம்மையார் மருத்துவ விடுதிக்குப்போகலாம் என்று சொன்னபோது அதுவும் நல்லதுதான் என்று "சரி போவோம் அம்மா வருவேன்" என்றேன்.

"இந்த வாரம் எந்த நிலையம் போவது?" என்றாள் ஒரு துடிப்பான சிறுமி, அங்கு வந்தவள்.

"நீதான் சொல்லேன்" என்று குழலியார் அவளையே சொல்லுமாறு தூண்டினார்.

"புதிதாக ஏதோ வெளிநாட்டிலிருந்து மின்சார இரயில் வண்டிகள் வந்திருக்கின்றனவாம்" என்றாள் அவள்.

"என்னடி இது மருத்துவ மனையைப் பார்க்கலாம் என்றால் மின்சார இரயிலைப் பார்க்க வேண்டும் என்கிறாயே?" என்றார் குழலியார்.

"அதுதான் அம்மா, மருத்துவ மனைக்கு அந்த இரயிலில் போகலாம். தாம்பரத்திற்கு அண்மையில் ஒரு மருத்துவமனை — இருமல் நோய்க்கு இருக்கிறதே" என்று சிரித்தாள் அவள்.

"போக்கிரிப் பெண்ணே, எல்லாம் தீர்மானம் செய்துகொண்டுதான் வந்திருக்கின்றாயா? சரிசரி அங்கேயே போவோம்" என்றார் குழலியார்.

அப்பாவையும் அம்மாவையும் மணிமேகலையைப் பார்த்துக்கொள்ள விட்டுவிட்டு நாங்கள் புறப்பட்டோம். மணிமேகலை இப்போதெல்லாம் என்னைவிட்டு நெடுநேரம் இருக்கப் பழகிவிட்டதினால் நான் 'குழந்தையை விட்டுச் செல்லுகின்றோமே' என்ற கவலை இன்றிச் சென்றேன்.

எல்லோரும் சேர்ந்து சென்றதினால் காருக்குக்குழலியார் ஓய்வு கொடுத்துவிட்டார்கள்.

நாங்கள் அடையாற்றிலிருந்து சைதாப்பேட்டை இரயில் நிலையம் வரை நடந்து வந்து நிலையத்தின் உள்ளே சென்றோம்; அப்போதுதான் ஒரு புது வண்டி தாம்பரத்தை நோக்கிச் சென்றது. அதில் ஏற முடியவில்லை.

அடுத்த இரயில்வரை காத்திருந்தோம். ஆனால் அடுத்த இரயில் பழைய வண்டியாகவே வந்தது. தாம்பரம் போகவேண்டும் என்று விரும்பிய சிறுமியின் முகம் வாடிவிட்டது. "வரும்போது அதைக் காணலாம் வருந்தாதே" என்று அவளைத் தேற்றிப் பழைய வண்டியிலேயே சென்றோம். மீனம்பாக்கத்து நிலயத்தில் ஒரு புதியவண்டி கடற்கரையைநோக்கிச் செல்வதைக் கண்டோம். அங்கு வந்த டிக்கட் பரிசோதகர் ஒருவரை "இந்தப் புதிய வண்டிகளை ஏன் அடிக்கடி விடுவதில்லை?" என்று கேட்டார் குழலியார். "அவை இந்தப் பழைய பெட்டிகளைப்போல் மிகுதியான மக்கள் ஏறினால் சுமையை இழுப்பது இல்லையாம் அதனால் அவற்றை மட்டும்கூட்டம் இல்லாத நேரத்தில் பயன்படுத்துகின்றனர்" என்றார்.

இரயில் வண்டிக்கும் சுமை அளவு பார்க்கின்றார்கள். ஆனால் என் மன வண்டிக்கோ சுமை அளவு கிடையாதா என ஏங்கினேன். வாழ்வில் நான் சுமந்த துன்பச் சுமையை அம்மம்ம...எவ்வளவுஎன்றுகணக்கிடுவது என்று கலங்கினேன்.

இரயில் தாம்பரம் வந்ததும் அங்கே முன்னே வந்து நின்றிருந்த புது வண்டியை அந்தச் சிறுமிக்குக் காட்டினோம். அதில் ஏதும் புதுமையைக் காணோம். உட்காரும் இடங்களும் பிறவும் புதுமை மெருகால் பளபளத்தன. மேலே விசிறி அமைத்திருந்தார்கள் அவ்வளவே. ஆனால் அந்தச் சிறுமியோ அதைக்கண்டு வியந்து நின்றாள்.

மீண்டும் கடற்கரை நோக்கிவந்த ஒரு மின் வண்டியில் எல்லோரையும் ஏறச்செய்தார் குழலியார்.

"ஏனம்மா மருத்துவ மனைக்குப் போகவேண்டாமா?" என்றேன் நான்.

"அங்குதான்போகிறோம்" என்றார். எனக்கு ஒன்றும் விளங்காமல் திகைத்தேன். ஏறிய இரண்டு நிமிடங்களில் ஒரு நிலயத்தில் இரயில் நின்றது. அங்குதான் மருத்துவ மனைக்கு இறங்க வேண்டும் என்றார் குழலியார்.

இதற்கு ஏனம்மா இப்படிச் சுற்றி வரவேண்டும்? சென்னையில் இருந்து வரும்போதே இறங்கும்படி செய்திருந்தால்?" என்றேன்.

"சிக்கனம் அம்மா சிக்கனம்! பணத்தைப் பலவழிகளில் தண்ணீர்போல் வாரி இறைத்து வீண்செலவு செய்யும் சர்க்கார் செய்த சிக்கனம் இது. சென்னையிலிருந்து வரும் வண்டிகள் நிற்க இயலாமல் செய்து எல்லோரையும் இப்படிச் சுற்றிவரச் செய்கின்றனர். இங்கிருந்து தாம்பரம் செல்லவேண்டுமாயினும் குரோம்பேட்டை சென்று திரும்ப இதே வழியில்வரவேண்டும். இதனால் எவ்வளவு மக்களுடைய நேரமும் பணமும் வீணாகின்றது என்று யார் எண்ணுகின்றார்கள்?" என்று குறைபட்டார்.

மருத்துவ மனையை எல்லாம் சுற்றிப் பார்த்துக்கொண்டே வந்த போது ஒரு நர்ஸ் விரைந்துவந்து "அம்மா, உங்களை அங்கே ஒருவர் அழைக்கின்றார். கொஞ்சம் வருகிறீர்களா?" என்று என்னைப் பார்த்துச் சொன்னாள்.

"என்னையா?" என்றேன்.

'ஆமாம்அம்மாஅதோஅந்தஅம்மா' என்று ஒரு மூலையைக் காட்டினாள். நான் குழலியாரைப் பார்த்தேன்' "போகலாம்" என்று சொல்லி மாணவிகளை ஒரு மரத்தின் நிழலில் உட்காரச் சொன்னார்.

நானும் குழலியாரும் அந்த மூலையை நோக்கிச் சென்றோம்.

அங்கே எலும்பும் தோலுமாகச் சதையே இல்லாத உடல்போல் யாரோ படுத்திருக்கக் கண்டேன். அது யார் என்றே எனக்கு விளங்கவில்லை. ஒருக்கால் வேறுயாரையாவது நினைந்து என்னை அழைத்துவிட்டார்களா என்றும் நினைந்தேன்.

என்னைக் கண்டதும் அந்த நோயாளி கண்களில் நீர் தாரை தாரையாக வழியக் கைகூப்பி வணங்கினாள். நானும் பதில் வணக்கம் செலுத்தியவாறு உற்றுப்பார்த்த போதுதான் உணர்ந்தேன். படுக்கையில் கிடந்த நோயாளி வேறு யாருமல்ல; எவளுடைய போக்கினால் என் வாழ்க்கை இன்று இவ்வாறு பாழ்பட்டுக் கிடக்கின்றதோ, எவள் என்னைக்கண்டாலே வெறுத்து ஒதுக்கித் தள்ளினாளோ அந்த ஓரகத்திதான் அங்கே இருக்கக் கண்டேன்.

அவளைக் கண்டதும் மறைந்திருந்த என் துன்பமெல்லாம் தூண்டிய விளக்கின் ஒளிபோல் மிகுதியாகிக் கொதித்தேன்.

"என் வாழ்வைக் கெடுத்தாயடி பாவி" என்று வைது ஆறுதல் பெற எண்ணினேன்.என்மனம்சாந்தத்தை இழந்து "தூற்று தூற்று" என்று கூவியது.

கருங்குழலியாருடைய கூட்டுறவும் பேராசிரியருடைய அறிவுரைகளும் இல்லாமல் இருந்தால் நான் அன்று "சண்டாளி உனக்கு வேண்டியதுதான்" என்று சொல்லிவிட்டு வந்

திருப்பேன். ஆனால் அந்த அம்மையாருடைய பழக்கமும் அவருடைய அறிவுரைகளும் என் மனத்தை எவ்வளவோ திருத்தித் தூய்மைப்படுத்தி இருக்கின்றன. 'மனதை நம் வழியில் வைத்து ஆளவேண்டும் தங்கம். உணர்ச்சிகளுக்கு அடிமை ஆகாமல் அறிவைப் பயன்படுத்தி வாழவேண்டும் எந்த நேரத்திலும். எல்லோரிடமும்—பகைவரிடமும் அன்பு காட்ட வேண்டும். அதைத்தான் வள்ளுவர் கூறுகின்றார்'' என்று அவர் சொன்ன அறிவுரைகள் என் மன மாசு துடைத்திருக்கின்றன.

அதனால் கோபம் பிறக்காமல் அமைதி அடைய இயன்றது என்னால்.

''யார்?'' என்றார் குழலியார் குறிப்பாக.

''ஓரகத்தி'' என்றேன்.

''ஓ! அப்படியா!'' என்றார் அவர்.

''ஏன் அக்கா அழுகின்றீர்கள். வேண்டாம் விடுங்கள்'' என்று அவளைத் தேற்றினேன்.

''நலன்தானே தங்கம்? என்ன குழந்தை? நன்றாக இருக்கிறதா?'' என்று கேள்விமேல் கேள்வியாகக் கேட்டாள். அதற்குள் இரண்டொரு முறை இருமல் வந்து அவளைத் தொல்லைப்படுத்தியது. பக்கத்தில் இருந்த கோப்பையில் எச்சிலை உமிழ்ந்தாள். சுருக்கமாக என் கதையையும் கணவர் அடிபட்டுக் கிடப்பதையும் கூறினேன். அதைக்கேட்டு அவள் அலறினாள் துடித்தாள். ''பாவி பாவி நான். ஐயோ ஐயோ'' என்றாள்.

''வருந்தாதீர்கள் அக்கா'' என்று தேற்ற முயன்றேன்.

அவள் எண்ணி எண்ணித் துன்பப்படுவது கண்டு இரங்கினேன்.

எப்படியாவது பேச்சை மாற்ற எண்ணி ''உடம்பு எப்படி அக்கா இருக்கிறது? என்றேன்.

''நான் என்ன சொல்வது? தேறிவிடும் என்கிறார்கள். எனக்கென்னமோ நம்பிக்கையே இல்லை. எனக்கு இதெல்லாம் வேண்டியதுதான். இன்னமும் வேண்டியதுதான். பாவி நான் என்னென்ன தீமைகள் இழைத்தேன்''

''அதெல்லாம் ஒன்றும் நினைக்கக் கூடாது. நல்ல தலல உடம்புக்கு''— என்றார் குழலியார்.

''உங்களுக்குத் தெரியாது அம்மா. என்னால் தங்கத்திற்கு எவ்வளவோ கொடுமைகள் நேர்ந்திருக்கின்றன. அவ்வளவு பெரிய பாவி நான்'' என்றாள்.

மீண்டும் அவளே பேசினாள்;

''எப்படியோ கெட்டுவிட்டேன் அம்மா நான். நான் கெட்டதுமின்றி மற்றவர்களையும் கெடுத்தேன். நான் வரகூருக்கு வாழப்போனபோது இளமை முறுக்கில் செறுக்கிக் கிடந்தேன் என் கணவர் ஆற்றல் குறைந்தவராகக் காணப்பட்டார் எனக்கு. சூழ்நிலையை ஒட்டி நான் ஒன்றும் அறியாத சொக்கப்பரைக் கெடுத்தேன். என் இளமை அறிவை மறைத்து என்னை அலைக்கழித்தது. ஒருக்கால் வீட்டில் பெரியவர்கள் இருந்திருந்தால் சீர்பட்டிருப்பேனோ என்னவோ''

அவள் பேசியபோது ''வேண்டாம் அதெல்லாம் சொல்ல வேண்டாம். பேசுவது உடலுக்குக்கெடுதல்'' என்று தடுத்ததையும் அவள் பொருட்படுத்தாமல் பேசிக்கொண்டே இருந்தாள்.

''என் இன்பத்திற்கு இடையூறாக வந்தாளே என்று தங்கத்திற்குக் கொடுமையின் எல்லையைக் காட்டினேன்.

''அதோடு நின்றிருந்தாலும் திருந்தி இருப்பேன். ஆனால் நானோ தீமையின் பெட்டகமாக மாறிவிட்டேன். நல்லது செய்வது மிகக் கடினமாக இருக்கின்றது. தீமையும் முதலில் செய்ய மனம் வருவதில்லை. முதன்முதலில் நிறைகெட்டபோது நான் எவ்வளவு வேதனைப்பட்டேன் தெரியுமா? ஆனால் தீமைமட்டும் ஒரு முறை வேர்கொண்டால் பிறகு நிலைத்து நின்றுவிடுகின்றது. மேலும் மேலும் புதிய தீமைகளைச் செய்யத் தூண்டுகின்றது.

''சினிமாவில் சேர்க்கிறேன் என்று சொல்லி அந்தத் தீயவன் பொன்னுச்சாமி என்னை ஏய்த்துவிட்டதும் அதனால்தான். அவனை நம்பி ஓடி வந்தேன். தனக்கு நிரைய செல்வாக்கு இருக்கிறது என்று வரகூரில் புளுகினான். ஆனால் இங்கே வந்த பிறது தெரிகிறது, அவன் என்னைப் பயன்படுத்திப் பிழைக்க முயன்றான் என்பது. என்னிடம் இருந்த நகையையும் பணத்தையும் கைப்பற்றிக் கொண்டு அந்தக் கொடியவன் என்னைத் தவிக்க விட்டுவிட்டான். இப்போது என்னைக் காண்பதே இல்லை.

''என்னுடைய வாழ்க்கையில் இன்னும் என்ன தீமைகள் கலக்கவேண்டும். கட்டுப்பாடும் முறையும் இல்லாத வாழ்க்கையால் முதலில் கொஞ்சம் கெட்டேன். இன்பம் இன்பம் என்று எதையோ எண்ணிக் கானல் நீர் பருக நினைந்து மிகுதியும் கெட்டேன். எனக்கு இந்த நோய் மிகமிகச் சிறு தண்டனை'' என்றாள்.

மீண்டும் ஒருமுறை இருமல் வந்தது. இந்தமுறை கொஞ்சம் வன்மையாக இருந்தது. கோப்பையில் துப்பிய எச்சிலில் இரண்டு துளி இரத்தம் இருக்கக் கண்டேன்.

''பேசக்கூடாது என்று சொன்னால் கேட்கமாட்டே'' என்று ஒரு நர்ஸ் அருகில் வந்து ஓரகத்திக்குச் சொல்லிப் போனாள்.

''போவதாய் இருந்தால் போ தங்கம், நேரமாகிறது. நான் உயிருடன் இருக்கும் வரை முடிந்தால் வந்து போ. செத்துவிட்ட பிறகு வந்து இந்த உடலை எரித்துவிடுப்போ. அதற்குள் மணிமேகலையை ஒரு முறை எடுத்து வந்து எனக்குக் காட்டு. ஒருமுறை—ஒரே ஒருமுறை — போதும் — அதற்குமேல் வேண்டாம். இந்த நோய் பொல்லாதது.'' என்றாள்.

நானும் குழலியாரும் பேசாமல் அமைதியாக இருந்தோம்.

''நேரமாகிறது போங்கள்'' என்று சற்று முன் வந்த நர்ஸ்கூறி எங்களை எழுப்பினாள்.

''வருகிறோம் அக்கா'' என்றுவிடை பெற்றேன். திரும்புகின்றபோது என் சிந்தை ஓரகத்தியையும் கானல் நீராகிப்போன அவள் வாழ்வைப் பற்றியுமே எண்ணி எண்ணி இரங்கியது.

மின் வண்டி கிண்டி நிலையத்தில் நின்றது. தடதட என்று ஆண்களும் பெண்களும் வந்து நுழைந்தனர். ஏறக்குறைய எல்லோர் முகமும் வாடிக் கிடந்தது.

''இங்கு என்ன இவ்வளவு கூட்டம்?'' என்று ஒருவர் மற்றொருவரைக் கேட்க, அவர்

தெரியாதா? இதுதான் கிண்டி. இன்று ஞாயிற்றுக் கிழமை. பந்தய நாள் ஆயிற்றே'' என்றார்.

இரயில் நகரும் வேளையில் ஒரு ஆணும் பெண்ணும் இணையாக ஓடி வந்து, தாங்கள் இருந்த பகுதியில் ஏறினார்கள். ஆண் பகட்டான உடையணிந்து படாடோபமாக விளங்கினான். அந்தப்பெண் உடல் மினுக்கியாக விளங்கினாள்.

''நான் சொன்னதுதான் சரி 'நைட்க்வீன்' தான் வென்றது பார்த்தீர்களா?'' என்றாள் அவள்.

''சரிசரி அதைப் பற்றி என்ன? விட்டுத்தொலை. நம்முடைய பணமா அது? அந்தவரகூர் நாட்டுப்புறத்தது தானே! போகட்டுமே'' என்று ஒரு சிகரட்டை எடுத்துப்புகைத்தான்.

கருங்குழலியார் அவனைத் திரும்பிப் பார்தது 'என்னிடம் மெதுவாக எட்டி 'ஓரகத்தி-உறவு' பொன்னுசாமியா?'' என்றார். 'ஆமாம்' என்று தலையாட்டினேன்.

சைதாப்பேட்டையில் அவன் கண்ணில் படாமல் இறங்கினேன்.

கண்ணகி இல்லம் செல்லும் பாதையில் முன்னைவிட உறுதியுடனும் மகிழ்ச்சியுடனும், நடந்துகொண்டிருந்தேன் மற்றவர்களுடன்.

முற்றும்.

சேவா மாநாடாம்!

ஒரு மாநாடு, சென்னையில் நடந்து முடிந்திருக்கிறது.

தலைமை வகித்தவர் புதிய கவர்னர்! பிரசங்கம் செய்தவர்கள் முதலமைச்சரும், சுப்ரமணியமும்.

மாநாட்டின் பெயர் சமூக சேவா மாநாடு! சர்க்காரின் சார்பு இருந்ததால் மாநாட்டைப்பற்றி முழு விபரங்களும் ஏடுகளில் வந்துள்ளன.

ஏழைகளின் அல்லல், உழைப்பின் மேன்மை, அவர்கள் உழைத்தும் சுகம் பெறாத கொடுமை முதலியவைகளைப்பற்றி ஒவ்வொருவரும் பேசியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஆபத்பாந்தவர்களாக விளங்குகிறார்கள் சமூக சேவையிலீடுபட்டிருப்பவர்கள் என்று பாராட்டுரையும் வழங்கியிருக்கின்றனர்.

புதிய கவர்னர் ஜான் கொஞ்சம் வேதனையோடு வெளியிட்டிருக்கிறார்; "இப்படிச் சமூகத் தொண்டில் ஈடுபடுகிறவர்களைச் சுலபமாகக் கேலிசெய்துவிடுகிறார்கள். பணக்காரர்களின் உல்லாசப் பொழுதுபோக்கு என்று சொல்லுகிறார்கள்! வேறு வேலையில்லாததால் செய்கிற காரியம் என்றும் பேசப்படுகிறது. உண்மை அதுவல்ல" என்பதாக.

உண்மை அதுவல்லவாம்! சமூக சேவைக்காகத் தம்மை அர்ப்பணித்திருப்பவர்களாம், இவர்கள்!

செய்த சேவை என்ன, செய்த இடம் எது, எப்படிச் செய்தார்கள் என்று பாமரனைக் கேட்டால், திகைப்பான். இதோ பாருங்கள், இந்த மாநாட்டின் சூத்திரதாரிகளை.

பிரதிநிதிகளை வரவேற்றவர் பெயர் திருமதி இந்திரா கோதாரி.

அறிக்கையை வாசித்தவர் கிளப்வாலா ஜாதவ்

நன்றியுரை நவின்றவர் மிஸ் விஜயா கோமன்.

இவர்கள் சமூக சேவாத் தூண்கள்! இவர்களைப் பற்றிக் கேளுங்கள் மக்களை, விழிப்பார்கள். ஆனால் கவர்னரும் முதலமைச்சர்களு-மோ, மோகனம்பாடியிருக்கிறார்கள்.

இந்தச் சமூக சேவாக்காரர்களுக்கு அரசாங்கத்தின் ஆதரவும் அரவணைப்பும் அதிகமுண்டு. உருப்படாதவைகளை ஊக்குவிப்பதில் காங்கிரஸ் அரசுக்கு இணை ஏது!

உண்மையான சமூகத் தொண்டன் உடலில் மட்டுமின்றி உள்ளத்திலே புண் ஏற்பட்டாலும் தாங்கிக்கொண்டு 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று, விளம்பரமில்லாதவனாய், பற்பல இடங்களில் தன்னால் சமூகத்துக்கு செய்ய முடிகிற தொண்டினைச் செய்துகொண்டிருக்கிறான்.

அவனைக் கவனிப்பாரில்லை! அவன் சாதி மத பேதங்களைக் களைய முயன்றால் இழிவும் பழியும் இதே அரசால் வழங்கப்படுகிறது. உழைப்பின் மேன்மையை யுணர்ந்து உழைத்து வதங்கும் ஏழை விவசாயி எலும்பு ஒடிந்தால் கட்டுப்போட ஆளுமின்றி, காலராவும் அம்மையும் வந்தால் போவதற்கு ஆசுபத்திரியின்றி சாகிறான்—நாட்டிலிருக்கிற மக்களிடம் பரவியுள்ள மூட நம்பிக்கைகளையும் அதனால் வரும் கேடுகளையும் எடுத்துச்சொல்லி, உண்மை கசப்பாகயிருக்கிற காரணத்தால், ஊராராலும் உற்றாராலும் பழிசுமத்தப்படுகிறான்.

அவனைக் கேட்க நாதியில்லை—அவன் அமைக்கிற படிப்பகங்களுக்குப் பணம் தர ஆளில்லை. ஆர்வத்துடன் அமைக்கப்பெறும் பல காரியங்கள் சிதைந்து சின்னாபின்னமாகி வருகின்றது! அவன் காலராவுக்குக் காரணம் காளியாத்தா அல்ல; காலராக்கிருமிகள் என்று முதல்நாள் பேசினால் மறுநாள் ஒரு அமைச்சர் அந்த ஊர் மக்கள் நம்பும் காளி கோயிலுக்குச் சென்று அதன் அருமை பெருமைகளைப்பேசும் "பிரசங்கபூஷணமாகி", சமூகத்தொண்டர்களின்சேவையையெல்லாம் தவிடுபொடியாக்கி விடுகிறார்!!

இதுநிலைமை—எனினும் அரசினர் உண்மைச் சமூகத் தொண்டர்கள் யார், காங்கிரசிலிருந்தபடியே இந்தக் காரியங்களைச் செய்வோர் யார், எந்தக் கட்சியினர் எங்கெந்த அளவுக்குச் சமூகத்துக்கு நன்மைபயக்கும் காரியங்களைச்செய்கிறார்கள், அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் தராவிடினும் உபத்திரமாவது தராமலிருப்போம், என்று கருதுவதில்லை. இந்நிலையில்சமூக சேவா மாடாடு கூட்டுகிறார்களாம்! அதுவும் சென்னையில்!!

ஏன் ஒரு கிராமத்துக்கு போயிருப்பதுதானே? அங்கே எப்படி இந்த சீமாட்டிகளின் 'பாண்டியாக்கும்', "பியூக்கும்" செல்ல முடியும்! விருந்துக்கும் வேடிக்கைக்கும் இடம் கிடைக்குமா—அதனால், சென்னையில் கூடி சிங்காரமாகப் பேசி, வழக்கம்போலக் கலைந்திருக்கிறார்கள்!!

*

மாலை நேரத்திலே, மையல் தரும் வேளையிலே, சோலையிலும், சொகுசு விருந்துகளிலும் பேசிவிட்டுக் கலைகிறசேவையல்ல சமூகத்தொண்டு. தீயைத் தாண்டும் சுபாவமும் தொண்டுசெய்யும் பண்பும் இருக்க வேண்டும்! ஆனால் இதுபோது எபபடி "டான்ஸ்' கற்றுக்கொள்வதென்பது ஒரு பெரிய இடத்து நாகரீகமாக வளர்ந்துவருகிறதோ, அதுபோல இதுவும் வளர்க்கப்பட்டு வருகிறது — இல்லாவிடில் செல்வர் கோதாரியின் திருவாட்டியாருக்கு என்ன தெரியும் சமூகத்தைப்பற்றி! திருமதி கோமன் ஒரு நாளாவது பசியின் கொடுமையைப்பற்றியும் பரதவிக்கும் மக்களையும் அறிந்திருப்பாரா! அம்மணி கிளப்வாலாதான் இதுவரை எத்தனை கிராமங்களுக்குச் சென்றிருப்பார்!!

சீமாட்டிகளுக்கும் சீமான்களுக்கும் பொழுதுபோக்காக இந்த சமூக சேவை அமைவது குறித்துக்கூட வேடிக்கையில்லை—இதற்கு சர்க்கார் அனுசரணையிருப்பதும், இவர்களாலேயே சமூக ஏற்றத் தாழ்வு சரிப்பட இருப்பதாக அமைச்சர்கள் வர்ணிப்பதும் இருக்கிறதே அதுதான் விந்தையிலும் விந்தையாக உளது!!

★

போதனை புரிகிறார்!

பணம் ஒரு பெரிசா! செயலும் உழைப்பும்தான் முக்கியம்—என்று உபதேசம் செய்திருக்கிறார்.

"பணம் என்ன? வெறும் காகிதக் கத்தை! ஆனால், காரியங்களைச் செய்கிறார்களே, அவர்களுடைய உழைப்புத்தான் உண்மையான செல்வம். அந்த உழைப்பாளர்களையே மதிக்கவேண்டும் – வெறும் காகிதக் கத்தையை அல்ல", என்று விளக்கம் வேறு தந்துள்ளார்.

"எடுத்த வேலையினை பொறுப்போடு செய்யவேண்டும். இது என்றும் வீணாகாது", என்றும் கூறியிருக்கிறார், சேவையின் பெயரால் சென்னையில் கூடிய மாநாட்டில், காமராஜர்!!

முதலமைச்சரின் கூற்றில் விவேகம் இருக்கிறது. உழைப்புத்தான் உண்மையான செல்வம் — பணம் இடையில் ஓடும் ஒரு சாதனம் தான். உழைப்பவனால் உலகம் உருள்கிறது! காடு திருத்திக் கழனிகள் உண்டாக்குகிறான், மண் வெட்டி தூக்கி மாலை முடியும்வரை வேலை செய்கிறான், அவன் வியர்வையிலே பளபளக்கும் தங்கம் கிடைக்கிறது, கரத்தால் துழாவுகிறான் கடலை—மோகன முத்தெடுக்கிறான், அவன் வைத்த பயிர் கதிர் மணிகளைத் தாங்கிக் குலுங்குகிறது—ஆனால்!!

உழைப்பே செல்வம், உழைப்பவர்களே ஒரு நாட்டின் முதுகெலும்பு — உழைப்பவர்களையே மதிக்கவேண்டும்—என்று காமராஜர் மட்டுமல்ல, நேரு பண்டிதர் போன்ற எல்லா அரசுத் தலைவர்களும் அடிக்கடி போதிக்கிறார்கள். அதுபோது, பணமா முக்கியம், எனவும் கேட்கிறார்கள். உண்மை தான்! பணம் முக்கியமல்ல — உழைப்புத்தான் முக்கியம்-உழைப்பவனே ஒரு நாட்டின் காவலன்—அவனன்றி ஓரணுவும் அசையாது ...ஆனால்!!

*　　*　　*

இந்த 'ஆனால்' எழும்புகிறபோது தான் நம் மனக்கண் முன் பல காட்சிகள் ஓட ஆரம்பிக்கின்றன. அதோ காலையில் ஆலைக்குப்போய் மாலையில் வீடு திரும்புகிறான், கசக்கிப் பிழியப்பட்ட கரும்பைப் போல. அவனைப் போய்க் கேளுங்கள்.

"என்னமோ என் தலைவிதி! எண்ணி ஒண்ணேகால் ரூபாய் கொடுக்கிறாங்க ஒரு நாளைக்கு. இருப்பதோ, பத்து வயிறு. பாவி மவ வேறு பெரிய மனுஷியாகி குந்திக் கிடக்குது. படி அரிசிக் குக்கூடப் போதல்லே, பணம். என்ன உழைச்சு என்னண்ணே பிரயோசனம்? சாகலாம்னு லும், வேளை வரமாட்டேங்குது!"

இப்போது அவனிடம், காமராசர் வழங்கிடும் நல்லுரையையும் உழைப்பின் மேன்மையைப் பற்றிய விளக்கத்தையும் சொல்லுங்கள். விழித்துப் பார்ப்பான் நம்மை! "அவுங்களுக்கு வேறு வேலை என்னண்ணே — தட்டிக் கொடுத்து மாட்டை ஒட்டுறது போல, நம்மைப் பெருமையாப் பேசிட்டு போயிட வேண்டியது... ஊம், என் கஷ்டம் எனக்கில்லே, தெரியும்."

அவனை விட்டுவிடுவோம், அதோ என். ஜி. ஓ. ஒருவர் வருகிறார், "என்ன சார் பைல் பைலா ஆபீசில் குவிஞ்சு கிடக்குது. அதைவிட்டு வீட்டுக்கு வந்தா, மலைமலையா கவலைகள் குவிஞ்சு கிடக்குது. என்ன வாழ்க்கை போங்கள்! தேதி பத்து ஆவதற்குள் வாங்கிய சம்பளம் பஞ்சாப் பறந்துபோயிடுது," என்று கவலைகளை உதிர்ப்பார். காமராசர் கூற்றுப்படி, உண்மையாக உழைப்பவர்தான் இவர். ஆனால்!!

உழைத்துழைத்து அலுப்பவர்களை விட்டுவிடுவோம்—காங்கிரஸ் நண்பர் வருகிறார், எடுத்த வேலையைப் பொறுப்போடு செய்தவர் என்று காங்கிரஸ் வட்டாரத்தில் பெயர் பெற்றவர். காமராஜர் வழங்கிய போதனையைச் சொல்லுவோம்.

"பேசிட்டாருங்களா அவரு? ஏன் பேசமாட்டாரு! பொறுப்போடு எந்த வேலையைச் செஞ்சாலும் பலன் கிடைக்குமாமா! அதுதான் கிடைக்குதே. கொடுத்தவேலையில் எதைச் செய்யாமல் விட்டோமாம் நாங்கள் — சத்யாக்ரகம் என்கிற போது தயங்கினோமா, தடியடி என்றபோது மயங்கினோமா, குண்டடி பட்டபோதும் அஞ்சினோமா, சுதந்திரத்துக்குப் போராடுவதில் எவ்வளவு பொறுப்பைக் காட்டினோம். என்ன கண்டோம்? டி. டி. கிருஷ்ணமாச்சாரி, நேருவுக்கு அடுத்த இடத்தில் இருப்பதைத் தான் பார்க்கிறோம்! நாம் தேய்ந்து ஓய்ந்து காலணாவுக்கு வழியில்லாமல் அலைவதுதான் மிச்சம்!!

"என்ன நண்பரே! பணம் ஒரு பெரிசா? பணத்தைப் பெரிசா நினைக்கலாமா?'', என்று காமராசர் சொன்னதைக் கூறுங்கள்.

"அப்படிச் சொல்லிட்டாரா அவரு! ஏன் சொல்லமாட்டாரு? பணத்தைப் பெரிசுன்னு நினைக்காததால்தானே, நான் பார்க்கிற வேலைக்கு எனக்கு இரு நூறு ரூபாயே போதும் என்று சம்பளம் வாங்கிக்கிறாரா...ஏண்ணே, நீங்க வேறே! எடுத்ததற்கெல்லாம் கோயம்புத்தூர் மில் முதலாளிகளுக்கிட்டேயும், மிராசுதாரர்களுக்கிட்டேயும் ஓடுற அவரு, ஏதோ சொல்லிவிட்டார்னு, நீங்களும் என்னிடம் பேச வந்துட்டீங்க...,''

*　　*　　*

மேலே குறிப்பிடப்பட்ட மூன்று வித ஆசாமிகளையும் நாம் அடிக்கடி காண்கிறோம். அவர்களுக்காகத் தான், பதவியிலிருக்கும் பெரியவர்கள் இதுபோன்ற போதனைகளைச் செய்கிறார்கள். ஆனால்!!

பணம் பெரிசா!—என்று காமராஜர் கேட்கும்போது தெரிகிற காமராஜர் வேறு — விமானமேறி கோவைக்கு ஓடி 'கொண்டா! கொண்டா!' என்று பணத்தைக் கொட்டிக்கொண்டு வரும் காமராஜர் வேறு. இப்படி இரண்டு உள்ளமும், இருமுகம் தாங்கியவர்களாகக் காமராஜரும் அவர்தம் குருநாதர் நேரு பண்டிதரும் இருப்பதால்தான், உழைப்புக்கு உண்மையான மதிப்பு ஏற்படவில்லை, பணத்துக்கும் பங்களாவுக்குமே 'மவுசும் மதிப்பும்' ஏராளமிருக்கிறது.

போதனைகளைப் புரிந்து தமது மேதா விலாசத்தைக் காட்டுவதற்குப் பதில், உழைப்பவன் நிலை உயரவும், பொறுப்போடு பணிபுரியும் புத்தியும், அரசுக் கட்டிலில் வீற்றிருப்போருக்கு ஏற்பட்டிருந்தால்—நாடு, நன்மலர்க் காடாக வன்றோ இருக்கும்! சொல்லிய போதனையில், ஒன்றையாவது, இவர்கள் வாழ்க்கையில் கடைப் பிடித்திருப்பார்களோ என்றால் பெரிய சைபர்தான் கிடைக்கும்!

★

லாமாக்களைப்பற்றி.....!

— பழநி —

இந்திய உபகண்டத்துக்கு அரசியல் விருந்தினராக வந்திருக்கும் டலாய்லாமாவும், பஞ்சன்லாமாவும் 17-ந் தேதியன்று சென்னைக்கு வந்துள்ளனர்.

உலகத்தின் கூரை என்றுகூறப்படும் திபேத் நாட்டின் செல்வாக்கு மிக்க தலைவர்கள் இவர்கள். மன்னாதி மன்னர்களும், மடாதிபதிகளின் தர்பார்களும் மக்கி மடிந்து வருகிற இந்தப் புதுயுகத்தில், திபேத்தையே ஆளும் பொறுப்பினை வகிக்கிறார் ஒரு மதத்தலைவர். அவர்தான் டலாய்லாமா, மகேசனின் உருவம், என்பர்! பேசும் கடவுள் என்று பெயரும் உண்டு அவருக்கு! அவருக்கு அடுத்த நிலையிலிருப்பவர் பஞ்சன் லாமா. பெரும்பாலும் இவருக்கு மதவேலைகள் மட்டுமே உண்டு.

இமயமலைச் சாரலில், காடும் மேடும், பள்ளத்தாக்கும் பயங்கரச் சரிவுகளும் நிரம்பிய பூமி திபேத். இங்கிருந்து இந்த லாமாக்கள் வெளியே கிளம்பியது கிடையாது! அரசியல் முறையில் வெளி நாட்டுக்குக் கிளம்பியது, இதுதான் முதல் தடவையாகும்.

அவர்கள் வெளியே கிளம்பாதது மட்டுமல்ல, அந்நியர்கள் எவரையும் திபேத்துக்குள் அனுமதிப்பதும் இல்லை. இதனால் திபேத்தை "தடுக்கப்பட்ட பூமி" என்று மேலை நாட்டினர் அழைப்பதுண்டு. அந்நியர்கள் உறவு, அவர்தம் மதமுறைகள், நாகரிகங்கள், பழக்க வழக்கங்கள் எதுவும் தம்மோடு ஒட்டிவிடக்கூடாது என்பதில் மிகுந்த அக்கரைகொண்ட திபேத்தியர்களது மதம், புத்த மார்க்கமாகும்! இங்கே எப்படி புத்தம் சென்றது, இந்த நிலைமை அடைந்தது என்பதற்குச் சரியான விபரங்களில்லை — எனினும், லாமாக்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன.

மாவீரன் என்று சரிதம் செப்பும் கூப்ளேகான் சீனாவின் முதல் சக்ரவர்த்தியாக இருந்த காலத்தில் கி. பி. (1216—96) திபேத்திலிருந்த லாமாவைத் தனது அரசசபைக்கு அழைத்திருக்கிறான். கூப்ளேகானை, இந்த லாமா, பௌத்த மதத்தைத் தழுவும்படிச் செய்திருக்கிறார்! அதற்கு பதிலாக கூப்ளேகான், திபேத்தைச் சீனாவிலிருந்து பிரித்து தனி நாடாக வாழும் உரிமையை அளித்தான். அதுமுதல் திபேத், 'ஆண்டிக்கோல அரசர்களின்' ஆட்சியின் கீழ் வந்ததாகத் தெரிகிறது.

கூப்ளேகானுக்குப் பிறகு வந்த சீனாவின் பேரரசர்களுடைய படையெழுச்சிகளுக்கு அடிக்கடி திபேத் ஆளாகியிருக்கிறது! அது போதெல்லாம், இந்த லாமாக்கள் அவதியும் துயரும் அடைந்திருக்கின்றனர்.

சீர்திருத்தம்

14வது நூற்றாண்டில் சாங்-காபா (Tsong-Kapa) என்பவரால் திபேத்திலுள்ள புத்தமதத்தில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன! "மதுவைத் தொடாதே — மங்கையை நாடாதே — மத குருவாகயிருக்கும் உனக்கு இதெல்லாம் கூடாது" என்று கடுமையான விதிகளைச் செய்தார் இவர். இவரது போதனைகளை ஏற்றுக்கொண்டோருக்கு மஞ்சள் குல்லாய்கள் என்று பெயர்! ஏற்கனவே இருந்து வந்தோர் சிவப்பு குல்லாய்கள் எனப்படுவர்!

மூன்றாவது லாமாவாக வந்த சோணம் கியாட்சோ (Sonam Gyatso) என்பார் காலத்திலே (15ம் நூற்றாண்டு மத்தியில்) மங்கோலிய மன்னன் அட்லேய்கானால், முழுமுதற் தெய்வப்பிறவி என்று லாமா அழைக்கப்பட்டார். அது முதல் டலாய் லாமா மடாலயமும் பிரசித்தி பெறலாயிற்று. சோணம் மங்கோலியர் மத்தியில் லாமாக் கொள்கைகளை மிகத் தீவிரமாகப் பரப்பினார்.

பிறகு வந்த 13-லாமாக்களிலும் 5-வது லாமாவும் 13-வது லாமாவும் மிகவும் கீர்த்திபெற்றவர்களாவார்கள். 5-வது லாமா, ஏழைக் குடியானவர்களின் மத்தியில் பிறந்தவர்! அவர் பட்டத்துக்கு வந்ததை, சிவப்புக் குல்லாய்கள் விரும்பவில்லை. அதனால் அவர், மங்கோலியரின் உதவியால் இவர்களையெல்லாம் 1641-ல் அடக்கினார்! அதுமுதல், மஞ்சள் குல்லாய்களின் மகத்துவமும் கீர்த்தியும் அதிகமாயிற்று. திபேத்தின் ஆட்சியும் இவர்களது கையிலேயே இருந்தது. இவரது காலத்தில் தான், மாபெரும் மாளிகை எழுப்பப்பட்டது! போடாலா என்று அழைக்கப்படும் இம்மாளிகை திபேத்தின் தலைநகரான லாசாவில் அமைந்திருக்கிறது. டலாய்லாமாவின் இருப்பிடம் இதுதான். இவருக்கு அடுத்தபடியாக ஆறாவது லாமாவாக வந்தவரின் வாழ்க்கை பரிதாபம் நிரம்பியது!

'லாமா' பரம்பரை

மன்னன் மகன் மன்னன், குருக்களின் மகன் குருக்கள், என்கிற முறையில், லாமாக்கள் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. ஒரு லாமா

இறந்ததும் அவர் இறந்த கொஞ்ச நேரத்துக்கெல்லாம் நாட்டின் பகுதியில் எங்கே குழந்தை பிறந்தது என்று ஆட்கள் மூலம் விசாரிப்பார்கள். சிலசமயங்களில், இறக்கும் லாமாக்கள், எந்தத் திசையில் அடுத்த லாமா உள்ளார் என்பதையும் சொல்லிப்போவதுண்டாம். அங்கு போய்த் தேடி, அந்தக் குழந்தையின் முன்னால் லாமாவின் சில பொருள்களை, பலவற்றோடு சேர்த்துவைப்பார்கள். குழந்தை, மற்றப் பொருள்களை விட்டுவிட்டு, லாமா உபயோகித்தவைகளை மட்டும் பொறுக்கினால், 'அடுத்த லாமா கிடைத்துவிட்டார்', என்கிற ஆனந்தத்தோடு அழைத்து வருவர், லாசாவுக்கு. அந்தக் குழந்தையின் பெற்றோருக்கு நிறைய வெகுமதிகள் தருவர்! விரும்பினால், குழந்தைக்கு அருகில் பெற்றோர்களும் வசிக்கலாம்—தனி மாளிகையில். குழந்தைக்கு ஆறேழு வயது வரும் வரையில் தன் அண்ணன் தம்பிகளுடன் விளையாடவும் அனுமதிக்கப்படும். ஆனால் தங்கைகளுக்கு மட்டும் அந்த உரிமை கிடையாது! பெண்ணைப்பற்றிய உணர்வு வரக்கூடாதல்லவா, அதனால் அனுமதிக்க மாட்டார்கள். இந்த முறைப்படி ஆறுவது லாமாவும் தேர்ந்தெடுக்கபபட்டார்.

ஆனால்...

பழைய சம்பிரதாயங்களில் இந்த ஆறுவது லாமாவுக்குப் பற்றுதலில்லை. வாழ்க்கையின் பல ரசங்களும் அவருக்குப் பிடித்தன. மது—மங்கை—மதுரகீதம், இம்மூன்றிலும் அவர் இலயித்தார். அவருக்கு கவிதை பாடும் திறனுண்டு! "ஏனிங்கு வந்தேன்? எனக்கு ஏனிந்த வாழ்வு!" என்று ஏங்கி அவர் வடித்தெடுத்த கவிதைகள் இன்றும் திபேத்தில் பிரசித்தம். தான் ஒரு லாமாவாக ஆக்கப்பட்டதால், மற்றவர்களைப்போல வாழ முடியவில்லையே என்று நொந்து போனார் இவர்! மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு அதன்படி நடக்காமல், தன்னிஷ்டப்படி காரியங்களைச் செய்வதைக்கண்டு, மக்களும் மதவாதிகளும் எரிச்சல் கொள்ளலாயினர். இதனால் 1706ல் இவர் பலவந்தமாக அதிகார பீடத்தை விட்டு சீனக்காரர்களால் வெளியேற்றப்பட்டார். அவருக்குப் பதில் 25 வயதுள்ள ஒருவரை டலாய்லாமா ஆக்கியது சீன சர்க்கார். இவரை, ஏற்க, திபேத்தியர்கள் மறுத்தார்கள். இதன் காரணமாக அன்பு மார்க்கம் தழைத்த அப்பூமியில் சீனர்களுக்கும் திபேத்தியர்களுக்குமிடையே பல போர்கள் மூண்டன—இரத்தம் சிந்திற்று அம்மண்ணில். சீனர் வெற்றி பெறவே, திபேத்தில் சீனாவின் ஆதிக்கம் அரும்பியது.

அதனால்......

சீனா வைத்தது சட்டமாயிற்று. டலாய்லாமாக்களும் அவர் தம் விருப்பத்துக்கேற்றவாறே பொறுக்கப்பட்டார்கள். இதன் காரணமாக பல டலாய்லாமாக்கள், காரணம் கண்டுபிடிக்க முடியாமலே, இறந்தனர்! 9-வது லாமா 11-வது வயதிலேயே மாண்டார்—அடுத்தவர் 23-வது வயதில்—11-வது லாமா 17-வது வயதில்—12-வது லாமா 20-வது வயதில் செத்தனர். இதற்கெல்லாம் காரணம், பதவி ஆசைகொண்ட 'ரீஜண்டு'களும், சீன அரசுமே காரணம் என்று கூறப்படுகிறது.

அடுத்தபடியாக வந்த 13-வது லாமா (1876—1933) அனுபவித்த அல்லல்கள் அதிகம். இருமுறை அவர் நாட்டைவிட்டே ஓட நேர்ந்திருக்கிறது! 1904-ம் ஆண்டில், திபேத்தில் ரஷ்யாவின் செல்வாக்கு அதிகமாக வளர்ந்து வருகிறது — அங்கிருந்தபடி தென் கிழக்கு ஆசியாவில் தன் செல்வாக்கைப் பரவச்செய்ய முயலுகிறது; இந்தியாவைத் தாக்கத் திட்டமிடுகிறது — என்று பிரிட்டிஷாருக்கு ஐயம வந்ததால் யங்ஹஸ்பண்ட் எனபார் தலைமையில் திபேத்துடன் நேச உடன்படிக்கை செய்துவர ஒரு குழுவை பிரிட்டிஷார் திபேத்துககு அனுப்பி வைத்தார்கள். அந்நியர்களதான் வரக் கூடாதே, திபேத்துக்குள். அதைக் காரணம் காட்டி, 13-வது டலாய்லாமா, லாசாவுக்குள் நுழையக் கூடாதெனத் தடுத்தார். இந்தக் குழு, இராணுவக் குழுவாக மாறி லாசாவை நோக்கிச் செல்லவே டலாய்லாமா மங்கோலியாவுக்கு ஓடி சரண்புகுந்தார். படையெடுத்துச் சென்றோருக்கும், லாசாவிலிருந்தோருக்கும் எப்படியோ ஒரு உடன்பாடு ஏற்பட்டது. இதன காரணமாக திபேத்தில் வெள்ளையர்களுக்குச் செல்வாக்கு ஏற்படலாயிறறு. இதைக் கண்ட சீன சர்க்கார் பயந்து போய், திபேத்தைத் தாக்கி லாசாவுக்குள் படையெடுக்கவே, டலாய்லாமா மிரண்டு போய் இந்தியாவுக்கு ஓடிவந்தார்! திபேத்தியர்கள் சீனப் புரட்சியின் போது (1911) ஒருவாறாக சீனர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, தனியரசாக்கினர். இவ்வளவு அல்லலுக்காளான இந்த லாமாவின் காலத்தில், திபேத்தில் பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. சீனாவிடமிருந்து திபேத்துக்கு விடுதலைவாங்கித்தந்ததும் இவர்தான். இவர் தனது 57வது வயதில் 1933ல் நிர்வாணம் அடைந்தார்.

14வது லாமா

அவருக்குப்பின் லாமா ஆக்கப்பட்டிருப்பவரே இப்போது இங்கே வந்தவர். 13வது லாமாவுக்குப் பிறகு அடுத்த லாமாவைத் தேட மிகவும் பிரயாசைப்பட்டு கடைசியில் 1937ல் குடியானவர்கள் இல்லத்தில் கண்டுபிடித்தனர். இது பற்றி பல கதைகள் உண்டு. இந்த லாமாவின் பெற்றோர்களிருந்த இடம் சீனாவின் எல்லைக்குள்ளிருந்ததால், சியாங்கே ஷேக்கின் அதிகாரத்துக்குட்பட்ட கவர்னர், நல்ல தொகை கொடுத்தாலொழிய தான் குழந்தையை எடுத்துச்செல்ல அனுமதிக்க முடியாதெனக் கூறிவிட்டார். இதுபற்றி ஓராண்டுக் காலம் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று கடைசியில் 1939ல் லாசாவுக்குக் கொண்டு சேர்த்தனர். 1952 வரை அவர் 'மேஜராகா'மலிருந்ததால் ஏஜண்டுகளே காரியமாற்றி வந்தனர். டலாய்லாமாவுக்குரிய பணிகளை நிறைவேற்றும் வண்ணம் போதனைகளைத் தந்து பயிற்றுவித்தனர் பாடோலா மாளிகையில்.

பஞ்சன் லாமா

எப்படி டலாய் லாமா கண்டுபிடிக்கப்பட்டு பதவியிலமர்த்தப்படுகிறாரோ அதுபோலத்தான் பஞ்சன் லாமாவும் குருபீடத்துக்கு வருகிறார். இவருடைய தலைநகரம் லாசாவுக்கு 200 மைல் தொலைவிலுள்ள டாஷிலுன்போ எனுமிடத்தில் உள்ளது. டலாய் லாமாவுக்கு அடுத்தபடியாக இருப்பவர் பஞ்சன லாமா. சீனாவில் கம்யூனிஸ்டுகள அரசாங்கம் வந்ததும் திபேத்துடைய நேசமும் நட்பும் வேண்டுமெனக் கருதி பல உடன்பாடுகளைச் செய்துகொண்டனர்.

திபேத்தியர்

திபேத்தைப்பற்றி கடந்த நூற்றுண்டு வரையில் பலருக்குத் தெரியாது. திபேத்தியரைப்பற்றியும், அங்கு யாராவது நுழைந்து விட்டால் அவர்களைக்கொடுமைப்படுத்தும் விதங்களைப்பற்றியும் விதவிதமாகச் சொல்லப்பட்டு வந்தாலும், அவர்கள் அப்படி ஒன்றும் கொடூரமானவர்கள் அல்ல—அன்பும், வந்தாரை வரவேற்கும் பண்புமுள்ளவர்கள் என்று திபேத்தைப் பற்றி எழுதும் பிரைட் ஹ்யூக்ஸ் எனும் வெள்ளையர் குறிப்பிடுகிருர். மிகப்பெரும்பான்மையானவர், ஏழைகள்தானும். ஒருவரை வரவேற்க நாம் கையைக் கூப்பி 'வணக்கம்' என்று சொல்கிருேமல்லவா, திபேத்தியருடைய வழக்கம் அதுவல்லவாம். ஒருவரை வரவேற்கத் தமது நாக்கை நீட்டிக் காட்டுவார்களாம்! அங்கு மிகவும் விலைபோகிற பொருள் தேயிலைதானும். கிட்டத் தட்ட திபேத்தியருடைய உணவே தேத்தண்ணீர் என்று கூறலாமாம். தேநீருக்கு அவர்கள் நம்மைபோல் சர்க்கரை கலப்பது இல்லையாம்; வெண்ணெயைச் சேர்த்துக் கொள்வார்களாம். பார்லியும் அங்குவிளைகிறதாம். இதையும் டீயுடன்கலந்தே சாப்பிடுவார்களாம். சம்பா என்று இதற்குப் பெயர். புத்த மதத்தவர்களாயிருந்தபோதிலும்திபேத்தியர் கோழி முதலியவைகளைச்சாப்பிடுவதுண்டாம். ஏழைகளாயிருப்போர் இல்லங்கள், இருட்டு வந்ததும் இருள்மயமாகக் காட்சி அளிக்குமாம்.

உயர்ந்த நிலையிலிருப்பவர்களுடைய வீடுகள், குடிசைகளாயிரா. கொஞ்சம்ஆடம்பரத்தோடு விளங்கும். அவர்களுடையஉடைநடை பாவனைகள் யாவும் சீனுக்காரர்களைப் போல இருக்குமாம். இவர்களில்பலர் பிரிட்டனபோன்ற வெளிநாடுகளுக்குச் சென்று படித்துப் பட்டம் பெறவும் ஆரம்பித்துள்ளார்கள்! இதனுல் ஒருகாலத்தில் 'புதைபொருள்'போலக் கருதப்பட்ட அங்கு மேற்கு நாட்டு விஞ்ஞானமும் அரும்பத் துவங்கியுள்ளது. லாசாவில் இப்போது மின்சாரம்கூட வந்திருக்கிறதாம்! டெலிபோனும், தந்திமுறையும்கூட உண்டு. கரன்சி முறையும்கூட அமுலுக்கு வந்துள்ளது.

ஏழையாயிருந்தாலும் பணக்காரர்களாயிருந்தாலும், திபேத்தில் லாமாக்கள்தான் செல்வாக்கு உள்ளவர்கள். திபேத்தின் பல இடங்களில், டலாய்லாமாவையும் பஞ்சன்லாமாவையும் தலைவர்களாகக்கொண்டபற்பல 'குட்டி'லாமாக்கள் உண்டு. இவர்கள் ஆங்காங்குள்ள மடாலயங்களின் கர்த்தாக்கள் ஆவார்கள். விழாக் காலங்களில் இந்த ஆலயங்களில் நாட்டியங்கள் நடைபெறும். இந்த மத குருமார், வேடம் தரித்துக்கொள்வார்கள். கெட்டதை வீழ்த்தி நல்லது வெற்றிபெற்றது பற்றியே இந்த நடனங்கள், மக்களுக்கு விளக்கும்.

புத்தரின் 2500-வது விழாவையொட்டி இந்திய உபகண்டத்துக்கு டலாய்லாமாவும் பஞ்சன் லாமாவு மட்டுமல்ல, ஏராளமான திபேத்தியரும் வந்துள்ளார்கள்! இப்படி வெளிநாடுகள் சென்றுவர ஆரம்பித்தால் விசித்திர நடைமுறைகளைக்கொண்ட, திபேத்திலும் புது ஒளி பரவாமலாபோகும்?

★

"ஒரே இந்தியா?"

மாநிலப் புனரமைப்பு மசோதா டில்லி மேல் சபையில் வாதிக்கப்பட்டபோது மறைந்த வீரர் டாக்டர் அம்பேத்கார் பேசியது, சீரிய பேருரையாக இருக்கிறது. அதனை, மீண்டும் கவனப்படுத்திக் கொள்கிருேம்— காங்கிரசாருக்கும் கவனமூட்டுகிருேம்.

டாக்டர்:- உத்திர பிரதேசம், ராஜஸ்தான் முதலியவைகள் பூதம்போன்று பெரிதாகியிருக்கின்றன. இந்த உறிஞ்சும் மாகாணங்கள் பெற்றுள்ள உருவத்தைக் கண்டு நான் அஞ்சுகிறேன் ....

கே. பி. எஸ் சென்:- கடவுள் உங்கள் ஆத்மாவைக் காப்பாற்றுவாராக!

டாக்டர்:- எனது ஆத்மாவுக்காகப் பிரார்த்தனை செய்யவேண்டாம். எனக்கு ஆத்மாவே இல்லை. நான் புத்த மார்க்கத்தைச் சேர்ந்தவன். யாரும் என்னுடைய ஆத்மாவைக் காப்பாற்ற கவலைப்பட வேண்டியதில்லை. கடவுளிடத்திலும் எனக்கு நம்பிக்கை கிடையாது... அமெரிக்காவில் மக்கள்தொகையில், ஒரு ராஜ்யத்துக்கும் இன்னொரு ராஜ்யததுக்கும் வித்தியாசம் உண்டு. ஆனுல், எல்லா ராஜ்யங்களுக்கும் ஒரேவிதமான அதிகாரங்கள். மேலேயிருப்பதற்கும், கீழே இருக்கிற சட்டசபைக்கும் ஒரே அதிகாரந்தான். ஆனுல், நமது நாட்டில் அங்ஙனம் கிடையாது... தென் ராஜ்யங்கள் ஒத்துக்கொள்ளாத பிரச்சினைமீது வட ராஜ்யங்கள் ஒன்ருகச் சேர்ந்து கொள்ளலாம். அப்படி ஏற்பட்டால் என்ன ஆகும்? தென் ராஜ்யங்களுக்குச் சிரத்தையுள்ள காரியங்களை வட ராஜ்யங்கள் நிராகரிக்கலாம். அப்படி ஏற்பட்டால் உள்நாட்டுக் கலகம் ஏற்படலாமென்று நான் பயப்படுகிறேன். அமெரிக்காவில் அப்படி நிகழ்ந்தது. என்ன காரணம்? அடிமைத்தனத்தை ஒழிக்க வட ராஜ்யங்கள் தீர்மானித்ததை தென் ராஜ்யங்கள் எதிர்த்தன. அதுபோலவே, வட ராஜ்யங்களின் ஆதிக்கத்தை விரும்பாத மக்கள் நம் நாட்டிலும் உண்டு. வட ராஜ்யங்களும், தென் ராஜ்யங்களும் ஒத்துக்கொள்ளாத விஷயங்கள் பல இருக்கின்றன. ஒற்றுமையை உண்டாக்கநாமெடுத்துக்கொண்ட முயற்சி எல்லாம் வீணுகிவிட்டன. இராசகோபாலாச்சாரியே, இந்திய யூனியன் உடைந்துவிடுமெனத் தெரிவித்துள்ளார்... உங்கள் கட்சிக்காரர்களைக்கொண்டே முடிவு செய்யுங்கள். எதிர்க்கட்சியையும் கலந்து செய்யுங்கள்; உங்கள் கட்சி நிரந்தரமானதல்ல என்பதை நினைவில் வைக்கவும், உங்கள் கட்சி உங்கள் கண்முன்பே ஒழிந்துகொண்டு வருகிறது... எச்சரிக்கிறேன்."

★

6-ம் பக்கத் தொடர்ச்சி

இந்த முழக்கம், கலவரத்துக்கு முன் அறிவிப்பாகிறது!

ஐயோ! கல்! கற்கள்! நாலா பக்கமும்!

தலை ஜாக்கிரதை, கண் ஜாக்ரதை!

ஓடிவிடுவோம், ஓடிவிடுவோம்!

பாவிப் பயல்கள்! கொலைகாரப் பயல்கள்!

கூப்பிடு போலீசை, போலீசைக் கூப்பிடு!

ஓடு! ஓடு! பதுங்கிட இடம், தேடு! தேடு!

மக்கள் இவ்விதமெல்லாம் கூவிக்கொண்டு ஓடுவது தெரியுமே, தம்பி, எணணத்தேரில் ஏறிச் சென்று பார்த்தால்.

அன்று, பட்டேல் தினம்!

மக்களும், தலைவர்களும், அநேகமாக, அந்த இரும்பு மனிதரை மறந்தேவிட்டார்கள்! மராட்டியத்திலும், குஜராத்திலும் அமளிநிலை இருப்பதைச் சரிப்படுத்த, எந்த ஆமதாபாத் நகரில் அவர் இட்டதுதான் சட்டம் என்ற நிலை இருந்துவந்ததோ அங்கே, படேல் தினம் கொண்டாடினால், மக்கள் பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்த பானம் சுவைப்பது போலாகி மாச்சரியத்தைமறப்பர், என்று எண்ணிக்கொண்டனர், மக்கள் இளித்தவாயர் என்ற எண்ணம்கொண்ட இறுமாப்பாளர்.

மகாகுஜராத் இயக்கத்தினருக்கு இந்தச் 'சூட்சமம்' புரிந்துவிட்டது; நீங்களென்ன படேல் தினம் கொண்டாடுவது! நாங்கள் நடத்துகிறோம் எனறுகூறி, காங்கிரசார் நடத்துவதற்கு முன்பு, மகாகுஜராத் ஆதரவாளர் சார்பில் கூட்டம் நடத்தினர்.

படேலின் அருமை பெருமைகளை எடுத்துரைத்தனர், 'பாரதம்' அவருடைய பணியின் பயனைப் பெற்றதைக் கூறினர்; பலன் பெற்ற கூட்டம் இன்று, தமது இலட்சியத்துக்கு, மகாகுஜராத்துக்கு இழைக்கும் கேடுபறறிக் கண்டித்தனர்.

வேறோர் இடத்திலே காங்கிரஸ் ஏற்பாடு செய்த கூட்டம்.

இதைக் கண்டதும், ஆத்திரம் பிறந்தது — ஆர்ப்பரிப்பு எழும்பிற்று—அமளி மூண்டது!

யாரோ இரண்டொரு காலிகள் செயல் எனறு, தேசீய ஏடுகளாலேயே இதனை அலட்சியப்படுத்திவிட முடியவில்லை. கல்வீச்சு கண்டிக்கத்தக்க செயல்; ஐயமில்லை! ஆனால் கல்வீச்சிலே ஈடுபட்டவர்கள், விரல்விட்டு எண்ணத்தக்க சிலர் அல்ல.

மாணிக்கசௌக் பிரதேசத்தில் 3000 பேர்கள் கற்களை வீசினர்!

என்று 'மித்திரன் தெரிவிக்கிறது!

மூவாயிரம் பேர் கல்வீச்சில் ஈடுபட்டால், எத்துணை அலங்கோலம் ஏற்பட்டிருக்கும், எவ்வளவு அமளி மூண்டுவிட்டிருக்கும்; எண்ணிப் பார்க்கும்போதே தம்பி, அந்தக் கண்ருவிக் காட்சி தெரிகிறதல்லவா?

போலீசார் 14 கண்ணீர் வாயு வெடிகளை உபயோகித்தனர்.

போலீஸ் மீது சோடாபுட்டிகள் வீசப்பட்டன.

கூட்டத்தைக் கலைக்க போலீஸ், தடியடி நடத்திற்று!

போலீசைத்தாக்கிட ஜனத்திரள் முனைந்தது.

மொத்தம் 30-போலீசாருக்கு மேல், காயமுற்றனர்.

நாலு ஆபீசர்களுக்கும் பலமான தாககுதல்.

போலீஸ் லாரிகள் ஜரூராயின!

போக்குவரத்துக்கு ஜனக்கூட்டம் தடைகளைப் போட்டுவிட்டன!

முனிசிபல் பஸ்கள் கொளுத்தப்பட்டன.

தம்பி! பெரியதோர் அமளி நடந்திருக்கிறது. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல், தேசீய ஏடுகள் தகவல்களைத்தருகின்றன!

வெறும் காலிகள் சேட்டை அல்ல இது! பொறுப்பு உணர்ந்தவர்களுககே, ஆத்திரம் பொஙகி எழததக்க விததததில் அநீதி இழைக்கப்பட்டால், காலித்தனமே கூட அவர்களுக்குக் கரும்பாக இனிக்கிறதுபோலும்!

பொங்கல் வாழ்த்துகள்

பொங்கல் திருநாளன்று உங்கள் மகிழ்ச்சியை நண்பர்களுக்கு அறிவிக்க சிறந்த தமிழ்—ஆங்கில வாழ்த்துக்கள் தயாராகிவிட்டன.

அரசியல் தலைவர்கள், இயற்கையின் எழிலோவியங்கள், உழவரின் உன்னத சித்திரங்களை விளக்கும் படங்கள் டிரைகலர் டிசைன்கள், மூன்றுவர்ண உறைகள், மாதிரி வேண்டுவோர் ரூ. 1—0—0 மணியார்டர் செய்யவும். ஆர்டர் தருவோர் 25% முன்பணத்துடன் விண்ணப்பித்துக்கொள்ளவும்.

உறையுடன் 100-வாழ்த்து ரூ. 7—0—0
தனி வாழ்த்துக்கள் 100க்கு ரூ. 5—8—0
உறை மூன்று கலர் 100க்கு ரூ. 2—8—0

தபால் செலவு தனி.

விபரங்களுக்கு:—

செங்கதிர் பதிப்பகம்,
28-ஏழுகிணறு தெரு, சென்னை-1.

எந்த அளவுக்கு, அங்கு காங்கிரசாட்சியின்மீது கசப்பு இருந்தால், கோபம் கொதித்தால், தம்பி இது நடந்திருக்கும் என்று எண்ணிப்பார்.

"இன்று மக்கள் தெருக்களில் காந்தி குல்லாய் அணிந்து சென்றவர்களைக் குல்லாய்களை அப்புறப்படுத்தும்படி நிர்ப்பந்தித்தனர்."

தம்பி! நிர்ப்பந்தித்தனர் என்ற நாசுக்கான பதத்துக்குப் பின்னாலே தெரியும் நானாவிதமான நடவடிக்கைகளைக் கூறவாவேண்டும்!

ஆமதாபாத் காட்டியதைவிடவா 'காஙகிரஸ் பக்தி'யை, வேறு நகரம் காட்டமுடியும்! அங்கு, இது! எல்லாம் எதன்பொருட்டு? மொழிவழி அரசு எனும் உரிமை அழிக்கப்படுவதை எதிர்த்து!

இங்குமட்டுமே தேவிகுளம், பீர்மேடு பறிகொடுத்திடவும், ஐயோ! இழந்தோமே என்று கதறினால், குளமாவது, மேடாவது என்று கேலி பேசிடவும் ஒரு முதலமைச்சரால் முடியும. காரணம் என்ன? அவர்தான் தமிழரின் புதியரட்சகர்! ஒரே ரட்சகர்! ஒப்பற்ற ரட்சகர்!—என்று நெஞ்சுநெக்குருகப் பேசும் பேரியக்கம் இருக்கிறது.

ஆமதாபாத்தில் காங்கிரசார் நடத்திய படேல் தினக் கூட்டம் காரணமாக இந்த அமளி ஏற்பட்டு பதினைந்தே நிமிஷத்தில் கூட்டம் கலைந்தது. வேறோரிடத்திலே மகா குஜராத் இயக்கம் நடத்திய 'படேல் தினம்', இரவு நெடுநேரம்வரையில் நிம்மதியாக நடைபெற்றது.

டிசம்பர் 2ந் தேதிதான் ஆமதாபாத் ஜில்லா போலீஸ் சூபரின்டெண்டு, நகரில்குற்றங்கள் பெரும் அளவுக்குக் குறைந்துவிட்டன, என்று அறிக்கை விடுத்தார்.

எனவே, காலிகளின்சேட்டையே இவ்வளவு அமளிக்குக் காரணம் என்று கூறுவதில் பொருள் இல்லை. வழக்கமாக இதுபோல் தத்துவ விளக்கம் தரும ஏடுகள் கூட, இம்முறை அதுபோல் கூறிடக் காணோம்.

படேல் தினம் நடத்திப் 'படாத பாடுபட்ட' காங்கிரசார் அதிகமாக வருத்தப்படுவதிற்கில்லை; ஏனெனில் இதைவிட 'மோசமான' நிலைமை காங்கிரஸ் அமைச்சராகப் பணியாற்றும் ஒரு அம்மையாருக்கு ஏற்பட்டது. அது டிசம்பர் 14ல்.

இந்துமதி சிமன்லால் சமூக நல மந்திரி! மாதர்குல நலனுக்காக, துவக்கப்பட்ட ஜோதி சங்கத்தின் கூட்டத்தில் கலந்துகொள்ள அம்மையார் சென்றார், கிளர்ச்சிக்காரர்கள் வளைத்துக்கொண்டனர்.

அமைச்சரின் மோட்டார் 'பன்க்சர்' செய்யப்பட்டதாம்! நடந்தே சென்றார்களாம் அமைச்சர்! வழி நெடுக, ஒரே கூச்சல், கேலி, கண்டனம், இடையிடையே கல்வீச்சு! கலவரத்தில் ஈடுபட்டவர் தொகை 2000 என்று, பம்பாய் 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகை எழுதுகிறது.

அமைச்சரின் விலாவிலும் முதுகிலும் அடியாம்! அவருக்குத் துணைசென்ற பத்து பன்னிரண்டு தாய்மார்களுக்கும் தாக்குதலாம்! பெண்களைப் பாதுகாக்கச் சென்ற போலீசாரில் ஐவருக்குப் பலமான காயமாம்! இத்தனைக்கும் போலீசார், கண்ணீர்ப்புகைக் குண்டு வீசிப்பார்த்தனர், கல்வீச்சின் முன்பு, அது போதுமான பலன் தந்ததாகத் தெரியவில்லை!

கார் கெடுக்கப்பட்டு விட்டதால் கால்நடையாகச் சென்றாரல்லவா, அம்மையார்; வழியில் பாவம், உருட்டிக் கீழேகூடத் தள்ளிவிட்டார்களாம்!

இவ்வளவு சங்கடத்தையும் சமாளித்துக்கொண்டு சங்கம்சென்றார், அங்கு என்ன நடந்தது தெரியுமா, தம்பி! உள்ளே நுழையாதே! என்று முழக்கமிட்டனர். யார்? பெண்கள்! மகா குஜராத் ஆதரவாளர்.

புதிய முதலமைச்சர் சாவன் மட்டும் தப்பினாரா? இல்லை, தம்பி, இல்லை.

ஆமதாபாத் காங்கிரஸ் மாளிகையில் ஊழியர்கள் கூட்டம் நடத்த வந்தார் முதலமைச்சர்.

வருகிற வழியிலேயே கலகம் ஆரம்பமாகிவிட்டது; கல்வீச்சு பலமாகிவிட்டது; கருப்புக்கொடிகள் ஏராளம்; கட்டுக்கு அடங்கும் போக்கு இல்லை; போலீஸ் நடவடிக்கை பலன்தரவில்லை; ஆர்ப்பாட்டக்காரர் அமளி நிலை உண்டாக்கிவிட்டனர். இது காலையில்!

மாலையிலோ, காங்கிரஸ் மாளிகையையே ஆர்ப்பாட்டக்காரர் முற்றுகையிட்டுவிட்டனர். போலீஸ் வளையம், அவர்களைத் தடுத்தது; ஆர்ப்பாட்டக்காரர் வளையத்தைப் பிளந்துகொண்டு முன்னேறினர், தடியடி, கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சு நடத்திப்பார்த்தனர்—பலன் கிட்டவில்லை. இடி முழக்கம்போல,

சாவன்! திரும்பிப்போ!

மகா குஜராத் வேண்டும்!

என்றனர் மக்கள். முதலமைச்சரின் முகம், படமாக்கப்பட்டதோ, என்னவோ! படமாக்கப்பட்டிருந்தாலும், பட்டியல் அதையா, காட்டுவார், மக்களிடம்!

'மாஜி'யையும் சும்மாவிடவில்லை' இந்த 'வம்புக்காரர்கள்'

அவர் இந்தத் தொல்லையே வேண்டாமென்று, பம்பாய்ப் பிரச்சினைக்குத் தலைமுழுக்குப் போட்டு விட்டு, நேருவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டார்! போகட்டும் என்று விட்டுவிட்டார்களா?

அவர் ஒரு கூட்டத்தில் பேசினர்—பேச முயன்றார்.

பெருங்கூச்சல் எழுப்பினர், பேச விடாதபடி தடுத்தனர்.

இதற்கெல்லாம் அஞ்சுபவன் நான் அல்ல, என்றார் மொரார்ஜி.

எதற்கும் நாங்கள் அஞ்சுபவர் அல்ல, என்று கூறுவதுபோல, மக்கள் தொடர்ந்து முழக்கமிட்டனர்.

மொரார்ஜி, கடுமொழி புகன்று பார்த்தார்—போலீஸ் நடவடிக்கை

அடுத்த தொடரோவியம்

தில்லை வில்லாளன் எம். ஏ.,

தீட்டும்

"சந்தேகம்"

திராவிடநாடு இதழில்,

வர இருக்கிறது.

எடுத்தது — குழப்பமோ நிற்க வில்லை.

இந்த நிகழ்ச்சி, பரோடாவில் டிசம்பர் 16-ல் நடைபெற்றது.

தம்பி! குஜராத்திகள் எத்துணை கொந்தளிப்பாக இருக்கிறார்கள்— மொழிப்பற்றும், அதனுடன் தொடர்பாக உள்ள உரிமை குறித்த ஆர்வமும், அந்த மக்களுக்கு 'எத்தனை தேசியம்' பேசப்பட்டாலும், 'பாரதீயம்' உபதேசிக்கப்பட்டாலும், குலைவதாகவோ, குறைவதாகவோ காணோம் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

குஜராத்திகள், காங்கிரஸ் வளர' கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தவர்கள்.

காந்தி மகாத்மாவை கோயில் கட்டிக் கும்பிடும் போக்கினர்.

'மகா குஜராத்' என்ற தேசிய எழுச்சியின் முன்பு, இதெல்லாம் இருந்த இடம் தெரியாமல் போகிறது.

இத்தனைக்கும், தம்பி, குஜராத்துக்கு, தமிழகத்துக்கு உள்ளது போன்ற உலகப் புகழ் பெற்ற வரலாறு கிடையாது! எனினும் அங்கே அந்த அளவுக்கு எழுச்சி இருக்கிறது! இங்கு, 'தமிழ்நாடு' என்ற பெயர் இல்லாவிட்டால் என்ன, குத்துகிறதா, குடைகிறதா' — என்று கேட்கும் காமராஜர் பவனிவருகிறார்.

தம்பி! இந்தக் கருத்து மட்டுமல்ல நான் உன்னைக் காணச் சொல்வது, நாட்டுக்கு எடுத்துக் கூறச் சொல்வது.

அங்கெல்லாம், மொழிக்கிளர்ச்சி எவ்விதமான கோர உருவம் எடுத்திருக்கிறது, எவ்வளவு அமைதியுடன், அறநெறி நின்று இங்கு பணியாற்றுகிறோம்—இதற்கு இங்குள்ள காங்கிரஸ் அரசு, எவ்வளவு சுறுசுறுப்புடன் அடக்குமுறையை அவிழ்த்துவிடுகிறது. இதை எண்ணினேன்—பொதுமக்களுக்கு அறிவிக்க, ஒரு துண்டு வெளியீடு அச்சிட்டு வழங்கினால் என்ன என்று தோன்றிற்று— அது இதோ—இதை அச்சேற்றி, இல்லந்தோறும் வழங்கும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளத்தான், தம்பி, நீ இருக்கிறாயே, எனக்கென்ன கவலை.

காட்டாட்சி

மராட்டியம்
குஜராத்
வங்கம்

எங்கும் கலகம்

மந்திரிகளைத் தாக்கினர்

நேருவை மடக்கினர்

போலீசை அடித்தனர்

கார்களைக் கொளுத்தினர்.

கதர்க் குல்லாயைக் கொளுத்தினர்! நேரு படத்தை உடைத்தனர்!

எல்லாம்

மொழி உரிமைக்கு.

அன்புடையோரே!

அறிவாளரே!

இங்கு நாங்கள்
உரிமை கேட்டோம்,
அமைதியாக
பலாத்காரமின்றி.

இங்கு காங்கிரஸ் தடியால் தாக்கி துப்பாக்கியால் சுட்டு

அடக்குமுறை தர்பார் நடத்திற்று.

ஏன் என்று கேட்கமாட்டீர்களா?

நீதிக்காக வாதாடமாட்டீர்களா?

கொடுமைக்கு ஆளானோர்

உங்கள் இனத்தவர் உங்கள் நாட்டவர்!

உங்கள் தொண்டர்!

அவர்களிடம் ஆதரவுகாட்டுவது
அடக்குமுறையைக் கண்டிப்பதாகும்

காங்கிரசை
ஆதரிப்பது
காட்டாட்சிக்கு
வழிகாட்டும்.

தி. மு. க

பட்டியல் கட்சியில் பணம் படைத்தோர் ஏராளம், பல இலட்சம் மிக இலேசாகத் திரட்ட வழி இருக்கிறது, படம் எடுக்கலாம், கட்டணமின்றிக் காட்டலாம்! உன்னால் முடியுமா, என்னால் முடியுமா? நாம், நம்மாலான முறையில், நாட்டுக்கு உண்மையை எடுத்துச் சொல்வோம். ஏழைக்கு ஏற்ற எள் உருண்டை என்பார்களே, அதுபோல, இந்தத் துண்டு வெளியீடு என்று எண்ணிக்கொள்ளேன்.

தம்பி! இதுபோன்ற துண்டு வெளியீடுகளை, வீடுதோறும் வழங்கு—தூய உள்ளம் படைத்தோர்; உண்மைக்காக வாதாட முன்வந்தே தீருவார்கள். காட்டாட்சியால் நாட்டுக்குக் கேடு என்ற பேருண்மையை உணர்ந்து, அதற்கு ஏற்ப, பொதுத் தேர்தலின்போது, தமது கடமையைச் செய்வார்கள்.

அண்ணன்,

அண்ணாதுரை

"போர்வாள்"

ஜனவரி முதல் மீண்டும் வருகிறது

ஆசிரியர்: காஞ்சி மணிமொழியார்

கதைகள், கட்டுரைகள், கவிதைகள், தயவு தாட்சணியமற்ற அரசியல் விமர்சனங்கள், அறிஞர்களின் வாழ்க்கை ஓவியங்கள், அடங்கிய அரசியல் வார இதழ்.

தனி இதழ் அணா 2. ஆண்டுச் சந்தா ரூ. 6—8—0 எல்லா ஊர்களுக்கும் முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

போர்வாள்' அலுவலகம்

128, பிராட்வே, சென்னை-1.

★ களிப்பூட்டும் காட்சி ★

பணிக்கம்பட்டி தி. மு. கழகக் கட்டிடத்தின் படம் இது! பார்க்கிறபோது, தோழர்களுக்கு ஒரு ஆனந்தமும் பூரிப்பும் ஏற்படத்தான் செய்யும். இதனைக் கட்டி முடிக்க பணிக்கம்பட்டித் தோழர்கள் என்னென்ன கஷ்ட நஷ்டங்களைத் தாங்கினரோ! அவையெல்லாம் இன்று கட்டிடம் கவினுறும் காட்சியாக விளங்குவதையும், அங்கே மக்கள் வந்து அறிவு விளக்கம் பெற்றுச் செல்வதையும் அனுதினமும் காண்கிறபோது நிச்சயம் மறைந்துபோய், ஆனந்தம் எழும் அவர் தம் முகத்தில். பணிக்கம்பட்டியில் மட்டுமல்ல, சிற்சில இடங்களிலும் கழகத் தோழர்கள் கழகக் கட்டிடங்களை அமைத்துள்ளார்கள்! நாம் சீமான் வீட்டுச் செல்லப் பிள்ளைகளல்ல. அதனால் கையளவே ஆனாலும் சொந்தக் கட்டிடம் எனும்போது பூரிப்பு அடைகிறோம். சென்னைக்கு, முன்பு சென்றால் எங்கே போய்த் தங்குவது என்பது பலருக்குப் பெரிய பிரச்னை! இப்போது, 'அறிவகம்' நோக்கி வெளியூர்த் தோழர்கள், எவ்வளவு ஆனந்தத்தோடு வருகிறார்கள்.



இதெல்லாம், விடுதலை வரலாற்றில் மிகச் சிறிய விஷயங்கள் என்றாலும், நம்மைப்பொறுத்த வரையில் சாதாரணமல்ல! ஏனெனில், நாம் கழகம் அமைக்கும் போது நம் கையில், நம்பிக்கை இருந்தது-கண்களிலே கண்ணீர் தானிருந்தது. எதுவுமற்றவர்களாக வெளியே வந்த நம்மால், இதுபோல ஊருக்கு ஊர் பல அறிவகங்களை அமைக்கவும், ஊருக்கொரு கலங்கரை விளக்கம்போல அவைகள் விளங்கவுமான காட்சிகளைக் காணும்போது இதயம் பூரிக்காதா! இதுபோன்ற மாளிகைகளை எழுப்ப, நம்மிடம் பணம் கிடையாது. ஆசையும் எண்ணமும் பளிச்சிடுகிறது — முயற்சிக்கிறோம் — முடிந்தும் விடுகிறது. இதைத்தான் சகிக்க முடியவில்லை, மாற்றுக்கட்சியினரால். 'நம்நாடு' எனும் ஒரு தினசரியை வெளியிட்டு வருகிறோம்—பெரிதாக்கும் ஆலோசனையும் இருந்து வருகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஏழைகளிருக்கிறார்கள்—வீதியில் வேலை செய்வோரிருக்கிறார்கள்—விவசாயிகள் உள்ளார்கள்—தொழிலாளர்கள் இருக்கிறார்கள்—மாணவ உலகம் மார்தட்டுகிறது—அவர்களனைவரும் ஒவ்வொரு நாளும் தத்தமது குடும்பச் சுமைகளால் தவிப்பவர்கள்தான்! என்றாலும் கழக ஏடு, கழக நன்கொடை எனும்போது வாயைக் கட்டியோ, வயிற்றைக் கட்டியோ, ஏதோ ஒரு செலவினத்தைக் குறைத்து, எப்படியோ தம்மாலான தொகையை வழங்கத் தவறுவதில்லை. இந்தக் காசுக்கு இருக்கிற மகத்துவத்தைச் சொல்லவும் ஒப்புமோ! சீமான் வழங்கும் இலட்சம் இதன் முன் தூசுக்குச் சமானமாகும்! இதுபோல பல துளி சேர்ந்துதான் நமது கழகமாளிகைகளை எழுப்புகின்றனர். ஊக்கமும், சிறிதுசிறிதாகச் சேர்த்துவைக்கும் பொறுப்பும் இருந்தால் ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு சொந்த இடம் ஏற்படமுடியும், நமக்கு. கழகத்தை வளர்க்கும் காவலர்களே! கண்ணியமிக்க, எதிர்காலவேந்தர்களே! இன்பத் திராவிடத்தின் எதிர்காலக் குடிமக்களே! ஓங்கட்டும் உமது பணி — வளரட்டும் கழகம்—வன்னெஞ்சர்களும் கண்டு வாழ்த்தும் நிலை ஏற்படட்டும்—ஊருக்கு ஊர் நமக்கோர் இடம் அமையட்டும்.

பணிக்கம்பட்டித் தோழர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியும், அதன் பயனாக அமைந்துள்ள இந்தக் கட்டிடமும் இதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

★

ஒளி தரும் ஆற்றல்

வானொலியில் புராணப் பிரசங்கம்—புகை வண்டியேறிக் கருட தரிசனத்துக்குச் செல்லல்—கண்ணைப்பறிக்கும் மின் விளக்குகள் ஒளி செய்ய வெள்ளித் தேர் இழுத்தல் — கும்பாபிஷேகத்துக்கு ஆர்ட் காகிதத்தில் அழைப்பிதழ் அனுப்புதல் போன்ற நிகழ்ச்சிகள் அன்றாடம் நம் நாட்டில் நடந்தவண்ணம உள்ளன.

என்றாலும் அறிவுத்தாகம் கொண்ட மேலை நாட்டு அறிஞர்கள் மனம் தளராமல், விடா முயற்சியின் துணையுடன், அஞ்ஞான இருள் படிந்த வையகத்தில் ஒளிவிளக்கேற்றும் பணியைத் துவளாமல் நடத்திக்கொண்டுதான் வருகிறார்கள்.

உலகில் மலிந்துகிடக்கும் இல்லாமையைப் போக்க—போதாமையைச் சரிக்கட்ட—துன்பம் துடைக்க—அறிவு வளர, தினம் தினம் புதுப் புதுச் சாதனைகளைச் செய்தவண்ணம் உள்ளனர் விஞ்ஞான வித்தகர்கள்.

காலைக் கதிரவனின் கவர்ச்சியில் உள்ளத்தைப் பறிகொடுத்து உன்மத்த நிலையில் நின்றுவிடாமல்—பக்தி, பிரவாகம் எடுக்க சூரிய நமஸ்காரம் செய்யாமல்—பத்துக் குதிரை பூட்டி சூரிய பகவான் தேர் சவாரி செய்யும் பாங்கு பற்றி பூரணம்கொள்ளாமல்—கதிரவன உமிழுமஒளியை எவ்வெவ் வகையில் மனித இனத்தின நன்மைக்குப் பயன்படுத்த முடியும் என்ற கேள்வியைக் கிளப்பி அதற்கு விடையும் கண்டுவிட்டார்கள் ருசிய நாட்டில்.

ஆர்மேனியாவில் உள்ள அரார்ட் (arart plain) சமவெளியில் உலகிலேயே முதன் முதலாக வெப்ப மின் தயாரிப்புச்சாலை (solar power station) உருவாகப்போகிறது. ருசிய நாட்டின ஒரு பகுதியான இவ்விடம் இப்பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்குக் காரணம, நாட்டின் எல்லாப்பகுதிகளையும்விட இங்குதான் கதிரவன் காயும் நேரமும், உமிழும் வெப்பமும் அதிகமாகும்.

இவ்வெப்ப மின் உற்பத்திசாலை முக்கால் கல் தொலைவு விட்டமுள்ள வட்டவடிவமான அமைப்பைக்கொண்டது. இங்கு பொருத்தப்பட்டிருக்கும் ஆடிகளில் (mirrors) தூசுபடியா வண்ணம இருக்க இப்பகுதியின எல்லைக்கோடுகள் அடர்ந்த மரங்களால் வேலியிடப்பட்டுள்ளன. 130 அடி உயரமுள்ள கோபுரம் இவ்வுற்பத்திச் சாலையுடன் அதன் மத்தியில் நிர்மாணிக்கப்படும். இக்கோபுரம், அங்கு அமைக்கப்படும் கொதி கலனின (Boiler) உதவியால் சுற்றிக் கொண்டே இருக்கும். இக்கொதிக் கலனில் உள்ள நீர், கதிரவனின வெப்பத்தால் கொதித்து, மணி ஒன்றுக்கு 24,640 பவுண்டு எடையுள்ள நீராவியைச் சதுர அங்குலத்துக்கு 441 பவுண்டு அமுக்கத்தோடு கொடுக்கிறது. இந் நீராவி குழாய்களின் வழியாக எடுத்துச் செல்லப்பட்டு 1200 கிலோவாட் மின் ஆற்றலைத் தரத்தக்க விசைச் சக்கரத்தை (Turbine)ச் சுழலச் செய்யும்.

1292 பெரிய ஆடிகளைச் சுமந்து கொண்டு தானாக இயங்கும் புகை வண்டித் தொடர்கள் பல செல்ல, கோபுரத்தைச் சுற்றிலும் 23-வளைந்த புகைவண்டிப் பாதைகள் போடப்படும். புகை வண்டிகள் சுமந்து செல்லும் ஆடிகளின் மொத்தப் பரப்பு 2,15,000 சதுர அடியாகும். இவ்வாடிகள் எக்காலத்தும் கதிரவனையே காணும்படியாக, தானாக இயங்கும்பல அமைப்புகள் பொருத்தப்படும். ஆடிகள் கதிரவனின் கிரணங்களை கொதிகலனின தட்டையான பரப்புகளின் மேல் விழச்செய்து அதனுள் இருக்கும் தண்ணீரைக் கொதிக்க வைக்கும். காலையில் கதிரவன கிளம்பியதும், கிரணங்கள் நிழல்பட இயக்கி (Photo Cells)யின்மேல் விழும். இவ்வியக்கி, பொருத்தப்படும் பல தானாக இயங்கும் அமைப்புகளுடன் (Automatic derices) தொடர்புகொண்டு, புகை வண்டித் தொடர்களையும், மற்ற அமைப்புகளையும் இயங்க வைக்கும.

இவ்வேற்பாடு பரிசோதனைக்கு மட்டுமல்ல; வாழ்க்கை வசதிகளுக்கும் பயன்படுத்தப்படும். இவ்வேற்பாட்டின மூலம் உற்பத்தியாகும் மின் ஆற்றலைக்கொண்டு தாழ்ந்த நிலப்பரப்புகளில் (sub soils) தேங்கிக் கிடக்கும் தண்ணீரை இறைத்து வயல்களுக்குப் பாய்ச்சப் பயன்படுத்தப்படும். இம்முறையில் 10,000 ஏகரா நிலப் பரப்பு பாசனவசதி பெறும் என்று மதிப்பிடப்படுகிறது. விசைச் சக்கரத்தை இயக்கிய பிறகு வெளிப்போகும் கழிவு நீராவியை, குளிர்ப் பிரதேச வீடுகளில் வெப்பம் கொடுக்கவும், வெந்நீர் போடுவதற்கும், சலவைச் சாலைக்கும் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

இந்நிலயம் ருசிய நாட்டின் விஞ்ஞானக் குழுவின ஆற்றல் பொறியியல் துறையினரால் (U. S. S. R. Academy of Secience's Power Engineering Institute) அமைக்கப்படவிருக்கிறது.

—கொங்குச்செல்வன்.

★